தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆவணி 20 (5-9-'59). சனிக்கிழமை | இதழ் 12

ஊருக்குழைப்போமடி
தில்லாலே!

ஒரு பயனும் அறியோமடி
தில்லாலே!

ஊரின் ஒழுங்கையும் அமைதியையும் கட்டிக் காக்கிறோம். இரவு பகலென்று பாராது, காடு மேடென்று கருதாது, அலைகின்றோம்; சட்டத்தைக் காக்கின்றோம்! ஆனால் எங்கள் வாழ்வைக் காப்பதற்கும், எங்களுக்காக அலைவதற்கும் எவருமில்லை!

ஊருக்கு உழைப்பதற்கென்றே பிறந்தோர் நாங்கள்! கொலைக்களங்களிலும், கொள்ளைக் கூட்டங்களிலும் அஞ்சாது நுழைந்து போராடுகிறோம். சமுதாயத்தின் பகைவர்களான குற்றவாளிகள் தரும் பரிசையும், பொறுத்துக் கொள்கிறோம்; கடமையை நிறைவேற்றுகிறோம்! ஆனால், எங்கள் துன்பங்களிடை நுழைந்து அவற்றை அழிப்பதற்கு எவருமில்லை; துன்பப்படுவோரைக் கண்டு கண்ணீர் வடிக்க வேண்டியது மனிதனின் கடமை. அந்தக் கடமையை எங்களைப் பொறுத்து நிறைவேற்றுவோர் எவருமேயில்லை.

ஆள்வோரின் அச்சாணிகள் நாங்கள். நாங்கள் நிலை சரிந்தால் அவர்கள் வாழ்வு அத்தோடு சரி. ஆனால், கடையாணியைக் கழற்றி விட்டுவிட்டுத் தேரோட்ட முனைகின்றனர், காங்கிரசார்!

எங்களைவிடப் பொறுப்பற்ற முறையில் ஊரைச் சுற்றுவோர்க்குக்கூட மிகுந்த ஊதியம் கிடைக்கிறது. கூலி தூக்குபவனுக்கு உள்ள பொறுப்புக்கள் குறைவு. ஆனால் அவனுக்கு வரும் வருவாயில் நாலில் ஒரு பங்குகூட எமக்கு வரவில்லை. ஒன்றும் தெரியாத அந்த அப்பாவி ஏனோ என்னைக் கண்டு நடுங்குகிறான்!

குளிர் சாதன வண்டியிலே நிம்மதியாய் உறங்கிக்கொண்டு "பாத யாத்திரை" செல்லும் அமைச்சர்க்கு, படித் தொகை மைல் ஒன்றுக்கு முக்கால் ரூபாய்! பொழுதெலாம் கண் விழித்து, அவரைக் காத்து, நிலையத்திற்கு நிலையம் இறங்கி அவர் விடுக்கும் ஏவல்களைக் கேட்டுக்கொண்டு, மூன்றும் வகுப்புப் பெட்டியில் "பயணம்" செய்யும் எனக்குக் கிடைக்கும் படியோ, நாளுக்கு முக்கால் ரூபாய்!

எந்தெந்தத் தொழில் செய்வோர்க்கும் வேலை நிறுத்தம் செய்ய உரிமையிருக்கிறது. சட்டமும் அதற்கு இடம் தருகிறது. ஆனால், அரசினிடம் "நம்பிக்கையும் விசுவாசமும்" கொண்ட நல்ல ஊழியர்களான எங்கட்கு அந்த உரிமைகூடக் கிடையாது. ஆச்சாரியார் ஆண்ட காலத்தில் வேலை நிறுத்தம் செய்ய முனைந்தோம். பூண்டோடு அழித்துவிடுவேன் என்று புறப்பட்டார், அவர். அத்தோடு எங்கள் குரல் வளையும் நெறிக்கப்பட்டது.

எங்களைப்போலத்தான், வேலூரிலும் மீரட்டிலும் பிற இடங்களிலும் இருந்த படையாட்கள், "சம்பளம்—படி முதலியன போதவில்லை! ஒழுங்காகச் சம்பளம் தா! உழைப்புக்கேற்ற சம்பளம் தா!" என்று கிளர்ச்சி செய்தனர். சம்பளத்திற்காக அவர்கள் நடத்திய கிளர்ச்சியை விடுதலைப் போர் என்று வருணித்து வாழ்த்துகின்றனர் இந்தக் காங்கிரசார். ஆனால் நாங்கள் நடத்திய கிளர்ச்சியை, நாட்டைக் கெடுக்கும் தீச்செயல் என்றும், சோற்றுப் போராட்டம் என்றும் சுருக்கமாகச் சொல்லிவிட்டனர். எங்கிருந்துதான் இந்த அறிவுக் கற்றைகள் எழுந்தனவோ?

இன்று எங்களுக்குச் செய்தியனுப்பியிருக்கும் ஆச்சாரியார் சொல்கிறார் "நாங்கள் ஏழையரிடத்து சொல்லிலும் சிந்தையிலும் அன்புகாட்டும் தன்மையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்" என்று. எங்கள் உடன்பிறந்தார்மீது எங்களுக்குச் சினமில்லை. நாங்கள் அன்பு காட்டத்தான் செய்கிறோம்; சிலநேரங்களில் அதே ஏழைகளை அடிக்கவும் செய்கிறோம். ஆள்வோர் கட்டளை அப்படி இருக்கிறது. அதற்காக நாங்கள் தனிமையில் சிந்தும் கண்ணீருக்களவில்லை! ஆனால் தங்கள் நலத்திற்கு எங்களைத் தூண்டிவிடுகின்ற காங்கிரசார், எங்களின் துன்பத்தைக் கண்டு என்றும் கண்ணீர் வடித்ததில்லை. மாற்று இயக்கத்தாரைத் தாக்க எங்கள் தடியையும், அம்பர் இராட்டையைச் சுற்ற எங்கள் மனைவியர் கைகளையும் பயன்படுத்துகின்ற காங்கிரசார், என்றும் எங்களுக்குப் பயன்பட்டதில்லை...

1859! அதற்கு முன்பே காவல் (போலீஸ்) துறை இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியரால் இயக்கப்பெற்றது. என்றாலும் அவ்வாண்டுதான் மாநிலவாரியாகப் பிரிவினை நடந்தது. அன்றுதொட்டு இன்றுவரை நூறாண்டுகள் கடந்துவிட்டன. நாங்கள் செய்த தொண்டுகள் எண்ணிக்கையைக் கடந்துவிட்டன. ஆனாலும் நாங்கள் பெற்ற நலங்கள்...விரல்கள்கூட மடங்கவில்லை.

நாட்டின் நலத்தில் அக்கறையுள்ளவனே! நீ எங்கேனும், அமைச்சரைக் கண்டால் நில்! அவரையும் நிறுத்தி, எங்களுக்குத் தரப்படும் வாழ்வு சரியானதுதானா என்று கேள்! பின் வேலையை நோக்கிப் புறப்படு! அதற்குமேல் கேட்டாயானால் எங்களையே விட்டு உன்னை அடிக்கச் சொன்னாலும் சொல்வார், அமைச்சர்! அவர் காந்தியின் பிள்ளையல்லவா?

—செல்லையா

சுற்றுப் பயணம்.

நெல்லிக்குப்பம், கோவை, வேலூர், குறிஞ்சிப்பாடி... எங்கணும் விழாக் கோலம்! காரைக்குடிக் கல்லூரியில் தமிழ் வெள்ளம்!

நேற்றுடன் முடிந்துபோன அறுபது நாட்கள் எனக்கு மிகவும் இனிமையான நாட்கள். ஏறக்குறைய நாற்பத்தி இரண்டு கூட்டங்களில் கலந்துகொண்டேன். இயக்கம் வேரூன்றியிருக்கும் பல சிற்றூர்களைக் காண்கின்ற வாய்ப்புப் பெற்றேன். ஒவ்வொரு நாளும் என் அரசியல் வாழ்வில் சுவையான நாளாகக் கழிந்தது. காட்டிலே வளர்ந்த மரம்போல், பத்து ஆண்டுகளுக்குள் ஓர் இயக்கம் இப்படி வளர்ச்சி பெற்றதை எந்த வரலாற்றிலும் காணமுடியாது.

திருச்சி மாவட்டம்–கீரனூரிலிருந்து பன்னிரண்டு கல் தொலைவில் ஒரு சிற்றூர் இருக்கிறது. ஏறக்குறைய நூறு வீடுகள்தான் அங்கே இருக்கும். நான்கு கல் தொலைவுக்கு நடந்தோ, மாட்டுவண்டியிலோதான் செல்லவேண்டும். அங்கு தி. மு. கழகத்தைத் தவிர வேறு கட்சி இல்லை. கல்லூரிகளில் படித்துவிட்டு வந்த அந்தச் சிற்றூரின் மாணவர்கள் சிலர், முதல் வேலையாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கியிருக்கிறார்கள் போகும்போது கால் நடை; திரும்பும்போது மாட்டுவண்டி. ஏழைகளுக்காகப் பாடுபடுபவர்களின் அரசியல் வாழ்வைப் புரிந்துகொள்ள இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்தான் துணை புரிகின்றன: கீரனூர்த் தோழர் ஆ. தமிழ்ச் செல்வன் சுறுசுறுப்பான ஓர் எறும்பு. அவர் ஓடியாடி, கீரனூர் வட்டக் கூட்டங்களையெல்லாம் முடித்த காட்சி என் கண்களை விட்டு அகலாது.

நெல்லிக்குப்பம் – அதிகமாகத் தொழிலாளர் வாழ்கின்ற ஊர். அங்கே வலுவுடைய இரண்டு கட்சிகள், தி. மு. கழகமும் பொதுவுடைமைக் கட்சியும். இவற்றில் பயனுடைய கட்சியாகக் கருதப்படுவது தி. மு. கழகம். அங்கே ஒரு சிறப்புக் கூட்டம். உளையா முயற்சியின் உருவான தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ யின் ஏற்பாடு நெல்லிக்குப்பம் தி.மு.க. செயலாளர் ஓர் ஏழை உழைப்பாளி. ஆனால் அவருடைய உள்ளம் தூய்மையானது. கழகம் எவ்வளவு பயனுள்ள தொண்டர்களை ஈர்த்திருக்கிறது என்பதற்கு அவர் ஓர் எடுத்துக் காட்டு. அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதாக விளம்பரப்படுத்தப்பட்ட சில நண்பர்கள் வேறு சூழ்நிலைகளால் வர இயலாமல் போயிற்று. நான்மட்டுமே சென்றிருந்தேன். அக்கூட்டத்தின் மூலம் ரூ. 1400 கழகத்திற்குக் கிடைத்தது. 80 நிமிடங்கள் பேசினேன். நிற்க,

கழகப் பணிக்கே தம்மை முழுக்க முழுக்க ஈடுபடுத்திக்கொண்டவர்கள் தமிழகத்திலும், ஈழத்திலும், மலைநாட்டிலும் ஏராளமாக இருக்கிறார்கள். எனினும், அவர்களில் தனி இடம் பெறத் தக்கவர் திருச்சித் தோழர் எம். எஸ். மணி. பொதுவுடைமைத் தோழர்களின் கடுமையான எதிர்ப்புக்கிடையே முப்பதுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களை நடத்திவருகிறார். கழகத் தோழர்கள் நடத்தும் தொழிற்சங்கங்கள் கட்டுப்பாடாக நடக்கும் என்பதை உறுதிப்படுத்தி வருகிறார். காலணாவும் வருமானம் இல்லாத நிலை. தொழிலாளரிடம் பணம் வாங்கிப் பழக்கப்படாத சங்கம். எனினும், சலியா உழைப்பையே பெரும் பொருளாகக் கொண்டு, ஏராளமான தொழிலாளர்களை ஈர்த்திருக்கிறார். அவர் ஒருநாள் ஈருருளையில் செல்லும்போது பாதையிலிருந்த தார் நிரம்பிய வாளி அவர் கால்களில் விழுந்துவிட்டது. இரண்டு திங்கள் வரை மருத்துவமனையில் படுக்கையிலேயே இருந்தார். அந்த மருத்துவச்செலவை ஈடுகட்டுவதற்குத் திருச்சியில் ஒரு நாடகம். கலைவாணரின் 'தளபதி'. அதில் நான் சிங்கோசி. கொட்டகை நிரம்பி வழிந்தது. நாடகத்தில் அரசியல் உரையாடல்களையே கூட்டத்தினர்வரவேற்றனர். ஓரளவுக்கு நாடகத்தின் நோக்கமும் நிறைவேறிற்று. செலவு போக ரூ 1200 தோழர் மணிக்குக் கிடைத்தது நிற்க,

கோவையில் ஒரு சிறப்புக்கூட்டம். கோவையைத்தான் உங்களுக்குத் தெரியுமே! சம்பத்து கால்வைத்த இடம் தங்கமாக விளையும் என்பதற்குக் கோவை எடுத்துக்காட்டு. தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் கோவை தி. மு. கழகத்தின் தூண்களிலே தலையாயவர். செய்வன திருந்தச் செய்யும் பண்பு படைத்தவர். அவரது சிரித்த முகத்திலும் சிந்தனை நிறைந்திருக்கும். கொங்குத் தமிழை அவர் பேசும்போது அது அழகாக இருக்கும். கோவையின் மற்றத் தோழர்களும்அப்படியே. காங்கிரசில் பணக்காரர்கள் அதிகமாக அங்கம் வகிக்குமிடம் கோவை. அந்த இடத்தில் காங்கிரசைத் தோற்கடித்து, நகரசபைக்குள்ளேஏராளமானகழகத் தோழர்களைக் கொண்டு வந்தது கோவை நகரக் கழகம். அங்கே கூட்டமென்றால் கேட்கவேண்டுமா? நகரமே திரண்டு இராயல் தியேட்டருக்குள் நுழைந்ததுபோலிருந்தது. இலட்சிய நடிகர் இராசேந்திரன் அவர்களும், நானும் பேசினோம். இந்த இருவரின் பேச்சுக்கு ரூ. 2250 காணிக்கையாகக் கிடைத்தது. சிவஞானங்களின் வயிறு ஏன் எரியாது? அங்கே கொடுத்து அழைத்தாலும் போகாத கூட்டம், இங்கே தந்து வந்து தமிழ்மழையைச் சுவைக்கிறது. கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, கொட்டகையே விழுந்துவிடுவது போன்ற கைதட்டல் எழுந்தது. இலக்கியக் கேள்விகளுக்கு தெரிந்தமட்டில் விடையளிக்கும்போது, எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது!

கூட்டம் முடிந்தது. அன்று மாலை நான்கு மணிக்கு கோவை, இராமநாதபுரத்தில் நண்பரொருவர் துவக்கிய 'உதயசூரியன் பிலிம்ஸ்' விழாவில் நானும் இலட்சிய நடிகரும் கலந்து கொண்டோம். நகரத்துப் பெரியவர்கள் பலர் பங்கேற்றனர். அந்த அமைப்புக்கு வேண்டிய உதவிகள் செய்வதாக இலட்சிய நடிகர் வாக்களித்தார். கொடுப்பதை விளம்பரம் செய்யாமல் கொடுப்பதும், செய்யும் நன்மையைப் பிறருக்குச் சொல்லாமல் செய்வதும் தன் பண்புகள் என்பதை இலட்சிய நடிகர் உறுதிப்படுத்திக்கொண்டார்.

அதன்பிறகு 6-30-க்கு சேலத்தை அடுத்த இராசிபுரத்தில் தோழர் நாகூர் அனிபாவின் இசை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினேன். அப்பொழுதான் முதன்முறையாக அந்த நகருக்குச் சென்றேன். நான் ஏறிச்சென்ற ஊர்தி நசுங்கிவிடாமல் திரும்பிவந்தது ஆச்சரியமே! முட்டி மோதிக்கொண்டு வந்து கைகொடுப்பவர்களும், உரத்த குரலில் 'வாழ்க!' ஒலி எழுப்புவோரும், அன்பு வெள்ளத்தில் என்னை மூழ்கடித்தனர். தண்ணீர்ப் பஞ்சம் மிகுந்த அந்த ஊரில் நம் கழகத்திற்கு மட்டும் ஆள் பஞ்சமில்லை!

இரவு எட்டு மணிக்குச் சேலம் வந்தேன். அன்று நகர் மன்றப் பொருட்காட்சியில் எனது அருமை நண்பர்கள் விசுவநாதம் – இராமமூர்த்திக்குழுவினரின் இசை நிகழ்ச்சி. பின்னணிப் பாடக, பாடகியர் அனைவரும் அதில் கலந்துகொண்டனர். ஆனால் அதைக் காணும் வாய்ப்பை யான் பெறத் தவறினேன். ஐநூறு கல் பயணத்தாலும், மூன்று இடங்களில் சுமார் நான்கு மணி நேரம் பேசியதாலும் தூங்கினேன்; தூங்கினேன்; இனி விழிக்காதவன் போலத் தூங்கினேன்!

சேலம் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்களுக்கும், பொருட்காட்சி நடத்திய நகர் மன்றத் தலைவருக்கும், கழகத் தோழர்களுக்கும் என்மேல் கோபம்! பொருட்காட்சிக்குப் போகாதது என் குற்றமல்ல; ஏற்பட்ட களைப்பின் குற்றம்! ஒருவழியாக நிகழ்ச்சி மிகச் சிறப்பாக முடிந்தது. நிற்க,

வேலூரில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம். எழுபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள். தோழர் எம். பி. சாரதி எம். எல். ஏ.யின் ஏற்பாடு என்றால் அது சிறப்பாகவேதான் இருக்கும். அவரும், வடஆற்காடுமாவட்டத்தின் பிற தோழர்களும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒத்துழைக்கும் தன்மை கட்டுப்பாடான கட்சிகளுக்கு ஒரு பாடமாகப் பயன்படும். உண்மையில் இந்த நகரிலேதான் தமிழரசுக் கழகம் என்ற ஒரு கட்சி நாட்டில் இருப்பது எனக்கு நினைவுக்குவந்தது. மேற்படி கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுவோர் இரண்டொருவர் இந்த ஊரிலே இருக்கிறார்கள். வயிற்றெரிச்சலோடு கூட்டத்தைப் பார்த்தபடி இவர்களும் நின்றுகொண்டிருந்ததாக நண்பர்கள் சொன்னார்கள். இங்கே சொற்பொழிவு களைகட்டிற்று. எம். ஏ. பட்டம் பெற்ற ஓர் அம்மையார் இந்த மேடையிலே அரங்கேறினார்கள். அப்பப்பா! வேலூர் நகரம் விழாக் கோலம் பூண்டது. தோழர் கோ. கிருட்டிணன் அவர்கள் இந்தக் கூட்டத்துக்காக என்னோடு கொண்டிருந்த தொடர்பு குறிப்பிடத்தக்கது.

அடுத்து, குறிஞ்சிப்பாடி. திரு. வி. க. நூல் நிலையத்தின் சார்பில் பொதுக்கூட்டம். செம்மையாக நடந்தது. சிறப்பாக முடிந்தது. இங்கேயும் ஊராட்சி மன்றத்தில் தி. மு. க. தோழர்கள் அதிகம்.

அடுத்து திருச்சி மாவட்டம். அன்பில் என்ற சிறு நகரில், மாலை நான்கு மணிக்கு உயர்நிலைப்பள்ளியில் சொற்பொழிவு. திருச்சி மாவட்டச் செயலாளர் தருமலிங்கம் பிறந்த ஊர் அது. இயற்கைவளம் நிறைந்த எழில்மிகுந்த அந்தச் சிறு நகரம், உயர்நிலைப்பள்ளியில் மக்களைக் கொண்டு குவித்தது.பள்ளி ஆசிரியர்களும் ஆவலோடு அமர்ந்திருந்து கேட்டனர்.

அன்றிரவே ஏழரை மணிக்கு. திருச்சி பாலக்கரையில் பொதுக் கூட்டம். கூட்டமா அது? படை திரண்ட காட்சி! அங்கே கொடியேற்றக்கூடாது என்று ஒரு பொதுவுடமைத் தோழர் தடுத்தாராம். எனினும் பெருத்த கைதட்டலுக்கிடையே கொடியேற்றி வைக்கப்பட்டது. இலக்கியக் கேள்விகள் கணைமழையாக வந்து விழுந்தன. அவற்றிற்கு விடையளிக்கும்போது எனக்கிருந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதே நேரத்தில் ஒரு பயமும் தோன்றிற்று. நம்மை எந்த அளவில் எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்ளமுடிந்தது. ஒவ்வொரு விடையும் பொதுமக்களால் வரவேற்கப்பட்டது. எனக்கும் இன்னும் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது.

மறுநாள் காரைக்குடி. அங்கே கூட்டமில்லை; ஓய்வு. சென்னைக்குத் திரும்பினால் தினமும் பதினெட்டு வேலைகள். நாளிதழ்களைக்கூடச் சரிவரப் படிக்கமுடிவதில்லை. அதனால் காரைக்குடியிலேயே இரண்டொரு நாள் அமைதியாகத் தங்கலாம் என்று முடிவுகட்டினேன். அதற்கும் வாய்ப்பில்லை. அழகப்பா கல்லூரி மாணவர்களும், கழகத் தோழர்களும் படையெடுத்தனர். அழகப்பா கல்லூரியில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றதாம்.

கண்ணதாசன்

அழகப்பர் நினைவுநாளில் வடமொழியிலேயே பாடவேண்டுமென்று கல்லூரி முதல்வர் கட்டளையிட்டாராம். அதனை எதிர்த்து, கலைக்கல்லூரியின் எல்லா மாணவர்களும் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தனர். 1500 மாணவர்களில் வடமொழி பயிலும் பன்னிரெண்டு பேர்தான் அன்று கல்லூரிக்குச் சென்றிருந்தனர். குழந்தைநாதன் என்றொரு தமிழ்ப் பகைவர் அங்கே ஆசிரியராகஇருக்கிறார். தமிழ் இனத்தில் பிறந்து தொலைத்த புல்லுருவிகளில் அவர் ஒருவர். பொதுவுடைமையையும் மதத்தையும் போட்டுக் குழப்பிக் கொண்டிருப்பவர். வகுப்பிலேயே தமிழுணர்ச்சியைக் கேலி செய்வாராம். இன்றைய மாணவர்களிடம் அது நடக்குமா? கல்லூரிக்குச் செல்லாத மாணவர்களிடம் தமிழ்ப் பேராசிரியர்களை அனுப்பி, வேண்டுகோள் விடுத்தார் கல்லூரி முதல்வர். எனினும் இறுதி வரை எந்த மாணவரும் கல்லூரிக்குள் செல்லவில்லை. எந்த அரசியல் வாதிக்கும் தொடர்பில்லாமல் மாணவர்களாலேயே நடத்தப்பட்டது,இது.

மறுநாள் கல்லூரித் திடலிலேயே நான் பேசினேன். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. துரைக்கண்ணு முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். "தமிழிலே பற்றுதல் போதாது; வெறி வேண்டும்" என்று யான் பேசினேன். முதல்வர் அதை ஒப்பி முடித்தார். கல்லூரி மாணவர்களது ஒற்றுமை இந்நிகழ்ச்சிக்குப் பிறகு பெரிதும் பலப்பட்டது. நாடெங்கிலும் உள்ள கல்லூரிகளில் நூற்றுக்குத் தொண்ணூறு மாணவர்கள் கழகக் கொள்கைகளில் பற்றுள்ளவர்கள் என்பதைப் புல்லுருவி ஆசிரியர்கள் உணர்ந்து தங்கள் பகையை வெளிப்படுத்தாதிருத்தல் நலம்! ★

திருச்சிக்கு விற்பனையாளர் தேவை.

திருச்சி நகருக்குத் "தென்றல்" விற்பனையாளர் தேவை. முன்பணம் கட்டக் கூடியவர்கள் உடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"தென்றல்"
சென்னை-6.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

என்னாம்

மலர் 6 ‖ 5—9—'59 ‖ இதழ் 12

பூவிருந்தவல்லியில் புதுமையணி !

போராட்டப் பாதை நீண்டுகொண்டே இருக்கிறது. மாற்றாரின் கணைகள் பல்லாயிரம் நம்மைக் கொத்திக் கிழித்துக்கொண்டேயிருக்கின்றன தடைகள் பல வழியெங்கும் நிறைந்து கிடக்கின்றன. ஆனாலும் நம் கடமையை நாம் ஆற்றிக்கொண்டே செல்கிறோம்! எவர் தடுத்தாலும் நாம் நம் பணியை நிறுத்தாமல் செய்துகொண்டே செல்கிறோம்! ஆமாம்; அதுதான் நமக்குள்ள ஒரே பலம்! நமக்குள்ள நெஞ்சத் துணிவும், தொண்டு மனப் பான்மையும் நம்மை ஊக்கி வருகின்றன; நாட்டைத் தூக்கி நிறுத்துகின்றன. நாம் கொண்டிருக்கும் கொள்கையும் போற்றிக் காக்கும் கோட்பாடும் சிறந்த ஒரு விடுதலைப் படையின் தலையாய சின்னங்களானதால்தான், நாம் நம் உணர்ச்சியை வளர்த்துக்கொள்ள முடிகிறது; ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள இயல்கிறது.

கிளர்ந்தெழுந்த புலிக்கூட்டத்தின் வழிவந்த நாம் அவ்வப்போது பல சிக்கல்களைச் சிந்தித்துச் செயலாற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று நம்மெதிரே தலைவிரித்தாடுகிறது இந்திப் பகை! விலைவாசிகள் உயர்வது பற்றிக் கவலையில்லை அமைச்சர்கட்கு! கோயங்கா போன்றோர் பல்லாயிரம் தொழிலாளரை வயிற்றிலடித்து, வாட்டி வதைக்கின்றனர்! இத்துணைச் சிக்கல்கள் இங்கே வெறிக் கூத்தாடியும் ஆட்சியாளர் - தில்லியின் ஆழ்வாரதியர்-மௌனகுரு கூட்டத்தார், எந்தக் கவலையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை! அமைச்சர்கள் அக்கறை காட்டாவிட்டாலும் நாம் அதில் அக்கறை காட்டி, தொழிலாளர் துயர் நீக்க முனைகிறோம்; ஏழையர் இன்னலை அழிக்கிறோம்; இந்திப் பகையை எதிர்க்கிறோம்! இவை நமது இன்றையக் கடமைகளாகிவிட்டன. தவிர்க்கமுடியாதவை என்பதற்காக மட்டும் நாம் இவற்றைச் செய்யவில்லை; நாட்டுமக்கள் தவிக்கக்கூடாது என்பதற்காகவும் இக்கடமைகளை ஆற்றுகிறோம். இந்த நல்ல உள்ளம் இருப்பதால்தான் நாம் நாளும் வளர்கிறோம்! நாட்டின் நாலாபுறத்திலும் வாழ்கிறோம்! நலிவுற்றபோதும் வலிவாகக் குரலெடுத்து முழக்குகிறோம்! இது உண்மை; ஒப்பரிய கடமை!

இவ்வுண்மைகளை மறுப்போர்க்கெல்லாம் விளக்கம் தரவும், பிறருக்குக் கொள்கை விருந்து தரவும், படை மறவர்கட்குப் புதிய கருவிகள் தரவும் நாம் அவ்வப்போது கூட்டுவதுதான் மாநாடுகள்.

கல்யாணியிலே 16 இலட்சம் ரூபாயைச் செலவழித்துக் கோலகலமாகக் காங்கிரசார் கொண்டாடப் போகின்றனராம், தம் மாநாட்டை. அசாமிலே கூடிய காங்கிரஸ் மாநாட்டிற்கு யானைகளையும் காண்டாமிருகங்களையும் கொண்டுவந்தனர். காமராசருக்குக் காட்டுவாசி வேடம் போட்டுக்காட்டினர். ஆவடி மாநாட்டில், இட்லி சுடும் இயந்திரத்தைக் கொண்டுவந்து காட்டினர். சினிமா நடிகர்களை இழுத்துவந்து தூக்கிக்கொண்டலைந்தனர்.

என்றாலும்-இந்தப் பல காட்சிகள், இருந்தும் நாட்டுமக்கள் அங்கே திரளவில்லை. திரண்டதெல்லாம் ஆலை முதலைகளும், தொழில் விலங்குகளும் தாம். அத்துணைச் சிறப்பு காங்கிரசார் மாநாட்டுக்கு! அதனால்தான் காங்கிரசார்க்கு அவ்வளவு வயிற்றெரிச்சல். "நாம் செலவழிப்பதில் நான்கில் ஒரு பங்கைக்கூடச் செலவழிக்கமுடியாத இவர்கட்கா இவ்வளவு கூட்டம்? என்ன விந்தை? நாம் திரட்டிய மாட்டு மந்தையில் அத்துணையும் கூலிப் படைகள் தாமே? இவர்கள் கூட்டிய மாநாட்டில் மட்டும் ஏன் இத்துணை பெரிய அளவு இளைஞர் படை! எப்படி வந்தது இவர்கட்கு இந்த நிலை" என்றெல்லாம் கேட்கின்றனராம் காங்கிரசார். அவர்களுக்கெல்லாம் ஒரே பதில்: "நீங்கள் பணத்தின்மீது கட்சியைக் கட்டுகிறீர்கள்! நாங்கள் தொண்டின் மீது எங்கள் கோட்டையை எழுப்புகிறோம்! இதுவே வேறுபாடு!"

இந்த உண்மையை இன்னும் தெளிவாக வலியுறுத்திக் காட்டுவதுதான், வரும் செப்டம்பர் 12, 13 ஆகிய நாட்களில் நடக்கவிருக்கும் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மூன்றாவது மாநாடு!

தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலையும் டி. கே. போரூரானும் வகாபும் பிறரும் அயராது உழைக்கின்றனர், ஒரு சிறந்த மாநாட்டைக் கூட்டிக் காட்ட!

பூவிருந்தவல்லி பொலிவு பெறுகிறது, தோழர்களின் எழுச்சியால்!

திராவிடம் எதிர் நோக்குகிறது, தீய இந்திபற்றி இம்மாநாடு எடுக்கவிருக்கும் முடிவுகளை!

வரவேற்புக் குழு எதிர்பார்க்கின்றது, திராவிடம் எங்கிலுமிருந்து மான மறவர் தானை அணி அணியாய் வருவதை!

வேங்கைக் கூட்டமே! உன் கைவிருப்பைக் காட்ட, எழு!

ஆண்ட மரபே! ஆர்த்தெழு, உன் புகழை மீண்டும் கொண்டு வர! ★

ஆசிரியத் தோழருக்கு

வணக்கம். 22—8—'59 "தென்றல்" இதழில் 'ஐயம் அகற்று' பகுதியில் தாங்கள் விடையிறுத்த ஓர் வினாவிற்கு தெளிவான விடை கீழே தந்துள்ளேன்.

யாப்பருங்கலக் காரிகை ஒழிபியலில், பாக்கட்கெல்லாம் எய்தியதோர் இலக்கணம் உணர்த்துவான் வேண்டி 45-ம் சூத்திரக்காரிகையில் வகையுளி என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. வகையுளி என்பது முன்னும், பின்னும் அசை முதலிய உறுப்புகள் நிற்புழியறிந்து குற்றப்படாது வண்ணம் அறுத்தலாம்.

அதாவது,

"அருணேக்கா நீரா ரசைசீ ரடிக்கட்
பொருணேக்கா தோசையே நோக்கி—மருணீக்கிக்
கூம்பவும் கூப்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு."

இவ்வகையில் கீழ்க்கண்ட குறள்வெண்பாவை அலகிடுவோம்.

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல."

இதனை 'வேண்டுதல்' எனவும், 'வேண்டாமை' எனவும் 'இலானடி' எனவும் அலகிடின் கலித்தளை தட்டு வெள்ளைத் தன்மை குன்றும். ஆதலின் 'வேண்டுதல்வே' என்று கூவிளங்காயாகவும், 'டாமை' என்று தேமாவாகவும், 'இலானடி' என்று கருவிளமாகவும், அலகிட்டுக் கொள்ள வேண்டும்.

இதேபோல் மற்றுமோர் குறள்வெண்பாவினையும் அலகிடுவோம்.

"கடியார் பூங்கோதை கடாயினுன் றிண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைந்து."

இதனைக் 'கடியார்' எனவும், 'பூங்கோதை' எனவும் 'கடாயினுன்' எனவும் அலகிடின் ஆசிரியத்தளையும் கலித்தளையும் தட்டு வெள்ளைத்தன்மை குன்றும். எனவே 'கடியார்பூ' என்று புளிமாங்காயாகவும், 'கோதை' என்று தேமாவாகவும், 'கடாயினுன்' என்று கருவிளமாகவும் அலகிட்டுக் கொள்ள வேண்டும்.

எனவே வெண்பாவில் கலித்தளை வாரா என்ற விதி உறுதிப்படுத்தப்படுகிறது. குறட்பாக்கள் வெண்பாவினத்தவே என்பது ஐயமறத் தெளிவாகிறது.

ஆம்பூர்,
25—8—'59

அன்புசால்,
தெ. செ. கிருட்டிணமூர்த்தி.

செங்கல்பட்டு மாவட்ட தி. மு. க.

மூன்றாவது மாநாடு.

பூவிருந்தவல்லியில்

செப்டம்பர் 12, 13 நாட்களில் நடக்கும்.

தலைவர் :

ஈரோடு
தோழியர் டாக்டர் சேதுபாஸ்கரன் எம்.பி., பி.எஸ்.

திறப்பாளர் :

உளுந்தூர்ப்பேட்டை
தோழியர் இராசேசுவரி சண்முகம்

இரு நாட்களிலும்

அறிஞர் அண்ணா நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

அனைவரும் வருக.

வரவேற்புக் குழுவினர்.

இரு நாளும் நாகூர் அனிபாவின் இன்னிசை உண்டு.

சனி இரவு 9 மணிக்கு

கண்ணதாசன் நடிக்கும்
புரட்சி நாடகப் பேரவை அளிக்கும்
" குற்றம் குற்றமே !"
நாடகமும்

ஞாயிறு இரவு 9 மணிக்கு

எம். என். கிருட்டிணன், மனோரமா நடிக்கும்
பாண்டியன் நாடக மன்றம் அளிக்கும்
" விடை கொடு தாயே !"
நாடகமும் நடைபெறும்.

கேரளக் கிளர்ச்சியின் தன்மையும் பயனும்

இந்தியத் துணைக் கண்டத்து அரசியல் அரங்கில் கேரளம் முக்கிய இடம் பெற்றுவிட்டது. கழிந்து போன நான்கு மாத காலமாக கேரளத்தின் பிரச்சனைகள் அகில இந்திய முக்கியத்துவம் பெற்றுவிட்டன. திருவனந்தபுரத்து ஆட்சிப் பீடத்திலே இருந்தவர்கள் கம்யூனிஸ்ட்கள் என்பதற்காக, மக்கள் ஏற்றுக் கொண்டாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்பதனை கேரளக் காங்கிரசாரும், அவர்தம் வடநாட்டுத் தலைவர்களும் வெறும் வார்த்தைகளினாலே அல்ல தங்களின் செயல்களினாலே உறுதிப்படுத்தி நமக்கெல்லாம் சொல்லியுள்ளார்கள் மக்கள் மன்றத்திலே மதிப்பிழந்துவிட்டவர்களின் மட்டரகமான அரசியல் போக்குகள் எப்படி இருக்கும் என்பதனை. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியினரும், இவர்களின் தயவினை நாடி நிற்கும் தலைவர்களும் உலகத்துக்கே தெரிவித்து விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இவர்களைப்பற்றி எந்த வகையான தவறான கணக்குகளையும் கொள்ளவில்லை. 1947-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை, காங்கிரஸ் பதவி வெறியர்கள் தங்களின் "அகில இந்திய ஒற்றுமை" என்ற வேடத்தை வைத்துக்கொண்டு மாநிலங்களின் உரிமைகளையும், தென்னக மக்களின் தேவைக்கான வசதிகளையும் எத்துணைத் தாழ்வாக மதித்து வருகிறார்கள் என்பதனையும் மிகத் தெளிவாகவே உணர்ந்து கண்டித்து வந்துள்ளது. ஆனால் மாட்சிமை மிக்க இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக்கொள்கைகளைப் பாராட்டி உள் நாட்டுக் கொள்கையினை மட்டும் எதிர்த்தவர்கள், பஞ்சசீலத்தைப் பாராட்டி பாரத சர்க்காரின் சாதனையைக் காட்டியவர்கள் கேரளத்தில் ஆட்சியைப் பெற்ற பிறகு இப்போதுதான் இவைகள் அத்தனையையும் ஒன்றாக வைத்து எதிர்க்கிறார்கள். கேரளத்தில் எதிர்க் கட்சியினர் என்ற அணிவகுப்பில் எவரெவரோ இடம் பெற்றார்கள். பரம பிதாவின் பாதாரவிந்தங்களைப்பற்றியே பேசிக்கொண்டிருக்க வேண்டிய பாதிரிகள்கூட, இந்தப் படையிலே சேர்ந்தவர்கள் கலகக் கும்பல் என்று தெரிந்த பிறகும் காத்தரின் கட்டளை கல்விச் சட்டத்தை எதிர்ப்பதே எனக் கூறி புனித நிலையங்களில் புகலிடம் தந்தார்கள். ஜூலை பனிரெண்டாம் தேதியிலிருந்து துவக்கப்பட்ட கேரளக் கிளர்ச்சிகள், கம்யூனிஸ்ட் சர்க்காருக்கு எல்லா வகையான தொல்லைகளைத் தருவதற்காகத்தான். தினசரி ஏடுகளில் எந்தப்பக்கத்தைப் புரட்டினாலும் கேரளம் முதலிடம் வகித்தது. காங்கிரஸ் தலைவி இந்திரா தேவியாரும், அவர் தம் செயலாளரும், முன்னாள் தலைவர் தேபரும் கேரளத்தைப் பார்வையிட்டு அங்கே குழப்ப நிலை இருப்பதாக முடிவு கட்டினார்கள். பாரதத்தின் பிரதமர் பண்டிதர் நேரு உதகையிலே விசாரணை செய்தார். இரண்டு நிலையிலே தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக போதனைகள் தந்தார்! சங்கரும் மற்றவர்களும் நேரு தங்களையே ஆதரித்தார்கள் எனறும் வெளிப்படையாகப் பேசினார்கள். கம்யூனிஸ்டுகளும், கேரளக் கிளர்ச்சி நேருவின் ஆசியினையும், ஆதரவினையும் பெற்ற பிறகுதான் பலம் பெற்று எல்லாப் பகுதிகளிலும் பரவிவிட்டது எனத் தங்களது கருத்தினைக் கூறி, நேருவே நீர் நெறி தவறுதீர் எனப் பல வேண்டுகோள் விடுத்தனர்!

இந்தி[illegible] அ[illegible]சில் சட்ட அமைப்புக்குள் அது அநுமதித்து அளித்துள்ள உரிமைகளின்படியே தாங்கள் ஆட்சி செய்யப்போவதாக கம்யூனிஸ்ட்டுகள பதவியேற்ற நேரத்திலே சொன்னார்கள். கல்விச் சட்டத்தை அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதென்று குடியரசுத்தலைவர் சொன்ன நேரத்தில்கூட தேவையான திருத்தங்களைச் செய்து நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். மதவாதிகள் அவர்களின் கட்டளைக்கு தலைவணங்கும் பாமரமக்கள் கல்விச் சட்ட எதிர்ப்பாளர்கள் என்ற முகாமாகி சர்க்காரைச் சவாலுக்கு அழைத்தார்கள். கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறக்கப்படவில்லை, மாணவர்கள் மறியலிலே நின்றார்கள். ஆசிரியர்கள் மட்டுமே நடமாட வேண்டிய அறிவலாயங்களில் 'குண்டர்கள்' என்று பெயர் பெற்றவர்கள் இடம்பெற்றனர். அவர்களை வெளியேற்றப் போலீசார் புகுந்தனர்; தடியடியும், கண்ணீர்ப்புகையும்பள்ளிகளில் கையாளப்பட்டன! அரசியல் இலாபவேட்டைக்காரர்கள் தங்களின் பெருமுயற்சிக்கு மாணவர்களைத் தங்களுக்குக் கருவியாக்கிக்கொண்டனர்! கேரளத்திலிருந்த கம்யூனிஸ்ட்டுத் தலைவர்கள் புதுடில்லிக்குச் செல்வதும், அங்கே மத்திய மந்திரிகளைக் கண்டு நிலைமையை விளக்கி மக்கள் தங்கள் பக்கம் இருப்பதையும் தெரிவித்துவிட்டுத் திரும்புவார்கள்! மறுநாள் காங்கிரஸ் சங்கரும்,சாக்கோவும் புதுடில்லிக்குப் போய் மன்னத்து பத்மனாபன் கட்டளைக்குக் கேரளமக்கள் காத்திருப்பதாகவும் உடனே மத்திய சர்க்கார் தலையிட வேண்டுமென்றும் வேண்டிக்கொள்வார்கள்! திரும்பும் வழியில் கம்யூனிஸ்ட் கோஷ்டியினை இவர்கள் நாகபுரி விமான நிலையத்தில் சந்தித்திருக்கவும் கூடும் ஏனெனில் கிருஷ்ணய்யரோ, கோவிந்தநாயரோ தங்கள் பங்கினை நிறைவேற்ற புதுடில்லி நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். மத்திய சர்க்கார் என்ற மகுடம் பெற்ற மகான்கள் தங்களைச் சந்திக்கும் கட்சித்தலைவர்களையும், மந்திரிகளையும் வெறும் பொம்மைகளாகவே மதித்து அவர்கள் சொன்ன செய்திகளையெல்லாம் கேட்டு வைத்துக்கொண்டார்கள். ஆனால் காங்கிரஸ் இந்திராவும், தேபரும், முன்ஷியும் மத்திய சர்க்கார் தலையீட்டினைத் தினமும் வலியுறுத்தி வந்தார்கள். கம்யூனிஸ்ட்டுத் தலைவர்கள் இந்திராதேவியாருக்கும், தேபருக்கும், மற்றவர்களுக்கும் சொன்ன பதிலுரைகள் மறக்கமுடியாதவைகள் நன்கு ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு! பூபேஷ்குப்தாவும் ஏ கே. கோபாலு இந்த அரும்பணியினைச் செய்தனர்!

கூடலரசன்

கேரளக் காங்கிரஸ் கமிட்டியினர் கம்யூனிஸ்ட் சர்க்காரின்மீது ஒரு குற்றப்பத்திரிகையைத் தயார்செய்து இந்திய அரசியலில் புதிய வழியைத் தோற்றுவித்தனர். கம்யூனிஸ்ட்டுகள் எந்தக் குற்றச்சாட்டினையும் ஏற்றுக் கொள்ளவில்லை. முதலமைச்சர் சங்கரன் தக்க காரணங்களைக் காட்டி தன்னுடைய சர்க்கார் தவறுகளைச் செய்யவில்லையெனச் சொன்னார். ஆனால் இதனை பனர்பள்ளி கோவிந்த மேனனும், பட்டம் தாணுவும் அப்பட்டமான பொய் என்று சித்தரித்தார்கள்! கம்யூனிஸ்ட்டுகளாகூட உண்மைகளைச் சொல்வார்களா என்ற பாணியிலேதான் அவர்கள் விவாதம் அமைந்தது, வரவேற்கவில்லை!

இந்தியாவின் புகழ் மங்கும் வகையில் கேரளம் உருவெடுத்தது. ஒவ்வொரு வீடும் போர்க்களமாகி தெருவுக்குத் தெரு சண்டைகள், போலீசாருக்கும் பொதுமக்களுக்கும் கல்லெறிகள் பரிசுகளாகக் கிடைத்தன! மறியல் செய்த தொண்டர்களை நீக்க போலீசார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அடக்குமுறைகளாயின. அடிபட்ட தொண்டர்கள் அனுதாபத்துக்குரியவர்கள். அவர்களைத் தூண்டிவிட்ட தலைவர்கள் கண்டனக் கூட்டங்களிலே முழக்கமிட்டார்கள். அடிபட்டவன் பிணமானான்! கேரளத்து அரசியல் உள்நாட்டுப் போராக மாறியபோதுதான், கிளர்ச்சிக்காரர்கள் திடீர் திடீரென குகை விட்டுக் கிளம்பும் புலியெனப் பாய்ந்தனர். சர்க்கார் சமாளிக்கமுடியாமல் சங்கடப்பட வேண்டும் என்பதற்காகவே தங்கள் போராட்ட முறைகளை மூடியும் மறைத்தும் வைத்தார்கள்! பொது மேடைகளிலே இரு சாராரும் கடுமையான வார்த்தைகளைப் பொழிந்துகொண்டார்கள்! மேடைப் பேச்சினை வைத்து எதனையும் சாதிக்க முடியும் என்று நம்பியவர்கள், நன்றாகத் தெரிந்துகொண்டவர்கள்தான் மக்களைத் தம் வழிக்கு இழுக்க அதனை ஆயுதமாக்கினார்கள்! எதிர்க் கட்சியினர் சங்கரன்நம்பூதிரிபாத்தை மலையாள மொழியிலே ஏசிய வார்த்தைகள் ஏட்டிலே இடம் பெறக் கூடாதவைகள்! பண்டித நேருவின் பயணம் திருவனந்தபுரத்தில் அமைந்தபோது அவரின் முன்னிலையிலே கேட்டார்கள் அரிசிக் கள்ளன் எங்கே? என்று. ஜோசப் முண்டசேரியைத் தேடினார்கள்; காங்கிரஸ் தலைவர்கள் இதனை வேடிக்கை கண்டார்கள்! நேரு இரண்டு நாட்கள் தங்கி ஆய்வுரைகள் தந்தபின்பும் கேரளத்தின் கொந்தளிப்பு அடங்கவில்லை. நேருவே ஆதரித்துத் தூண்டிவிட்டார் என எண்ணத்தகும் நிலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டன. போலீஸ் நிலையங்கள் தாக்கித் தகர்க்கப்பட்டன காந்தியார் வளர்த்துவிட்டக் காங்கிரசின் பெயரால்! பள்ளிக்கூடங்கள் இழுத்து மூடப்பட்டன கல்விச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு! மாணவர்கள், மாணவிகள், மாஜி நடிகைகள், நடன ராணிகள், மறியலுக்கு வந்தார்கள் 'கேரளத்தைக் காப்போம்' என்ற முழக்கத்தோடு! கம்யூனிஸ்ட் சர்க்காரின் வேண்டுகோள், அறிக்கைகள் எதனையும் ஏற்றுக்கொள்ள அவர்கள் முன் வரவில்லை! மன்னத் பத்மனாபன் மாதர் படையைத் திரட்டிக் காட்டினார். தீப்பந்தங்களை யேந்திப் புறப்படுக சர்க்கார்மாளிகையை நோக்கி, எனக் கட்டளையிட்டார்! கலெக்டர் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. பிரஜா சோசலிஸ்ட்த் தொண்டர்கள், மிகத் தீவிரமாக பட்டம் தாணுவின் ஆசைகளுக்கேற்ப செயலாற்றினார்கள். எப்போதும் பறக்க விடமுடியாத தங்கள் கொடியை, இந்தக் கலவர நேரத்தில் துணிவாகச் சென்று கலெக்டர் அலுவலகத்திலிருந்த கொடியை இறக்கிவிட்டு, ஏற்றிவிட்டார்கள்; சிறிது நேரம் களிப்புக் கொண்டாடினார்கள்!

இந்திய அரசியல் சட்டத்தின் உரிமைகளும், உயரிய தன்மைகளும் கேரள சர்க்காருக்கு ஆதரவாகவே இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கம்யூனிஸ்ட்கள் மத்திய ஆட்சியாளரை எதிர்பார்த்தனர்; குடியரசுத் தலைவரின் ஆதரவை வேண்டினர்; எதுவும் கிடைக்கவில்லை. ஜூலை இறுதிவாரம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லாக் கிளைகளுக்கும் சோதனைகாலம். கேரள சர்க்காரைக் காப்பாற்ற எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்தார்கள். சென்னையிலும், மதுரையிலும், திருச்சியிலும் கேரள அமைச்சர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்கள் சாதனைகளைச் சொன்னார்கள். நெல்லையிலே கௌரி அம்மையார் பேசுவதைக் கேட்க விரும்பாதவர்கள், கலகமும் செய்து பார்த்தார்கள். கேரளத்தின் எல்லாப் பெருநகரங்களிலும் இரு கட்சித் தலைவர்களும் தாங்களே சரியான பாதையில் சென்றுகொண்டிருப்பதாகத் துணிந்து பொய் சொன்னார்கள்! மன்னத் பத்மனாபன் பேசிய கூட்டத்தில் ஒரு லட்சம் பேர்கள் கூடினர் என்றால் சங்கரன் நம்பூதிரிபாத் பேசிய கூட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கூடினர் என்று உடனே ஒரு செய்தி வெளியிடப்படும். அடிபட்டு மிதிபட்டு செத்தவர்களின்மீது நின்றுகொண்டுதான், இரத்த வெள்ளத்திலே நின்றுதான், தங்கள் பலத்தை எடைபோட்டனர். நாம் இந்த இரு முகாம்களைக் கவனித்தபோது காலடியில் நசுங்கிப்போன கேரளமக்களையும் மறந்துவிடவில்லை! மத்திய சர்க்கார் தனக்குள்ள வஞ்சக எண்ணத்தினால் காங்கிரஸ் கட்சியினரைக் கண்டிக்கவில்லை. சிக்கலான கலவர நிலைமை இன்னும் வளரட்டும் என்றே எண்ணினார்கள்; சோகச் செய்திகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். கல்விச்சட்டத்தை எதிர்க்கத் துணிந்தவர்கள், ஆந்திர அரிசி வாங்கியதில் குற்றம் கண்டவர்கள், நிலச் சீர்திருத்த மசோதாவில் குறை சொன்னவர்கள், கேரள சர்க்கார் கம்யூனிஸ்ட் கட்சியின் நலன் தேடுகிறது எனக் கண்டித்தவர்கள் கடைசியில் கம்யூனிஸ்ட் சர்க்காரை பதவியைவிட்டு விலகச் செய்வதே தங்களுடைய முக்கியமான குறிக்கோள், முதல்தரமான

— 9-ம் பக்கம் —

தென்றல்

5-9-'59

காரைக்குடிக் கவியரங்கம்

குறள் நெறிக் குடும்பம்

அவை யேற்றம்.

தென்றலுக்கு மணஞ்சேர்க்கும் பூவைப் போலே
திரைப்படத்திற் சுவைகூட்டும் பாட்ட ளிப்போன்
இன்றுகுறட் கவியரங்கம் தன்னில் வந்த
இசைக்கவிஞன் செந்தமிழன் கண்ண தாசன்
நன்றினிது தலைமைபெற்று வீற்றி ருக்க
நாட்டினரே திருக்குறளின் தலைவன் சீரை
மன்றேறிப் பாடுகின்றேன் வணக்கம்! அன்பு
மனங்கவரும் தமிழ்க்கவிதை கேட்பீர் கேட்பீர்!

4. தலைவன்.

தோல்சிவந்த மேனிகொண்ட பெண்ணொ ருத்தி
தோன்றிவரக் கண்டவுடன் காளையர் தாம்
மால்படிந்த உளத்தினராய்ச் சுற்றி வந்து
மனத்தினிலே இலக்கியத்தில் வரும் தலைவர்
போல்நினைத்துக் கொண்டிடுவார்; காதல் சீட்டுப்
போக்கிடுவார்; தனியிடத்தைத் தேடி நிற்பார்
சேல்நிகர்த்த விழியாளைக் கண்டு நெஞ்சத்
தேன் குடத்துக் கற்பனையை வடித்து வைப்பார்!

அன்னவளின் செந்நிறத்தை மங்கச் செய்யும்
அழகுநிறம் கொண்ட வளாய் இன்னொ ருத்தி
தன்னெதிரில் வரக்கண்ட கணமே நெஞ்சம்
தாவிமரக் கிளைமாறும் மந்தி போல
முன்னவளை மறந்துவிட்டுப் புதிய பெண்ணின்
முன்சென்று நின்றேங்கும்; காதல் சீட்டும்
பின்தொடரும்; தனியிடத்தை நாடும்; காதல்
பிறிதொருத்தி வரும்வரைக்கும் நிலைத்தி ருக்கும்!

கோவையிலே ஒருபெண்ணைக் காத லித்துக்
கூடலிலே ஒருத்தியுடன் மணம் முடித்துத்
தேவையுள்ள போதெல்லாம் வேறு வேறு
தேடுகின்றார் சிலதலைவர் இந்த நாளில்!
காவியத்து நாயகரின் மேன்மை பற்றிக்
கழகத்துக் கூட் டத்தும், பத்திரிக்கை
ஓவியத்தும் காண்பதன்றித் தலைவர் என்போர்
உள்ளத்தில் நடைமுறையில் காணற் கில்லை.

எழுச்சியுறும் பருவத்துப் பசியைத் தீர்த்தும்
இன்முகத்தில் மலர்ச்சிரிப்பை விரித்தும், தேனைக்
குழைத்துவைத்த இன்சொல்லால் குளிர வைத்தும்
கொஞ்சிவிளை யாடியின்ப முத்தம் தந்தும்
அழைத்திருந்த போதெல்லாம் தனித்து வந்தே
அன்புமழை பொழிந்திருந்த அழகை; இன்பந்
தழைத்திருக்கும் பூக்காட்டைத் தவிக்க விட்டுத்
தான்வாழ நினைப்பவனும் மனித னோமோ?

அன்றன்று பூத்துவிழும் மலர்கள் போல
அவதாரம் எடுத்துவரும் காதல் தானும்
அன்றன்றே விழுந்துவிடும் என்ற சேதி
அறியாமல் தற்காத்து நெறிநில் லாமல்
நின்றபழி தீர்வதற்கு நஞ்சு தின்றும்
நிறைகுளத்தில் பெருங்கடலில் கிணற்றில் வீழ்ந்தும்
சென்றொழிந்த மாதர்பலர் அந்தோ அந்தோ
திருக்குறளின் நெறியுணர்ந்தால் தீமை யுண்டோ?

திருக்குறளின் நெறித்தலைவன் காத லித்த
சேயிழையாள் தனைப்பிரிய நினைப்ப தில்லை!
உருக்கொண்ட காதலெனும் தீயைப் பற்றி
உரைக்கின்ற தத்துவத்தின் விளக்கம் காணீர்;
நெருக்கத்தில் வரும்போது குளிர்ச்சி காட்டி
நீங்குகின்ற போதுசுடும் தீயைக் கொண்டாள்
பெருக்கெடுக்கும் அமுதனைய தோளும், காதல்
பிணிதீர்க்கும் மருந்து முடை யாளே என்றான்!

மயில்தானோ அழகுமகள் தானோ இந்த
மங்கையென மயங்கியவள் தாக்கும் கண்கள்
உயிர்கொல்லும் கூற்றமென உணர்ந்து, கொல்லும்
ஒருகளிற்று மதவெறியை நிகர்ப்ப தான
உயர்ந்திருக்கும் மார்பகத்தைக் கண்டு நெஞ்சில்
உண்டாகும் அச்சத்தால் வலிமை மாறித்
துயர் தீரக் காதலெனும் மதுக்குடிக்கத்
தோகைகடைக் கண்பார்வைக் கேங்கி நிற்பான்!

நோக்குமவள் பார்வையினால் நோய்வாய்ப் பட்டுஅந்
நோயொடுங்கக் கண்களவு கொண்டு நிற்பான்
தாக்குமவள் பார்வையிலும் சொல்லி னுள்ளும்
தனைவிரும்பும் குறிப்புளதோ என்று ராய்ந்தே
ஏக்கமுடன் பார்த்திருப்பான்; புன்சி ரிப்பில்
ஏந்திழையாள் கருத்தறிவான்! பாயும் கண்கள்
நோக்கொத்த போதிருவர் நெஞ்சத் துள்ளும்
நுழைந்துவிடும் காதலுக்குச் சாவே யில்லை!

தெய்வீகக் காதலென எதையோ சொல்வார்
திருக்குறளில் அதுபற்றிக் கண்ட தில்லை
பெய்கின்ற மழைப்புனலும் நிலத்தில் வீழப்
பிளவுடைய விதையதுதான் முளைத்தல் போல
மைநின்றே எழில்கூட்டும் கண்ணின் பார்வை
மழைப்புனல்தான் ஆடவனின் செங்கண் என்னும்
செய்நிலத்தில் வீழுங்கால் காதல் என்னும்
செடிமுளைக்கும்! அன்பாலே செழிக்கும்! ஓங்கும்!

ஒத்திருக்கும் பருவத்தார் இருவர் கூட
உள்ளத்தில் எழும்பிவரும் உணர்ச்சி யாலே
ஒத்தமனம் உடையாராய்த் தங்கள் வாழ்வில்
ஒருவருக்கு மற்றொருவர் உடைமை யாகி
நித்தநித்தம் அவருருவும், அன்பும் பண்பும்
நினைத்திருக்க நினைத்திருக்க வளரும் காதல்!
பித்தர்மொழி தெய்வீகப் பேச்சை நம்பிப்
பெருங்காதல் சிறிதென்று வெறுக்க வேண்டாம்

தன்னெஞ்சங் கவர்ந்தவளும் ஒருத்தி யேதான்!
தன்காதல் அவளொருத்தி யிடத்தி லேதான்!
என்றுரைப்பான்! அவளுயர்வைத் தெரிவிக் கின்றான்!
எழிற்பூவும் வான்மதியும் இவளை யொக்கும்
என்றுரைக்க முடியாதே; அவையி ரண்டும்
எவர்வரினும் முகம்காட்டும்; குவளை நாணும்
சின்னவிழி மெல்லியலோ என்னை யன்றித்
திருமுகத்தைப் பிறர்காணத் தோன்ற மாட்டாள்!

— 10-ம் பக்கம் —

தொல்காப்பியச்சுவை!

12. மரபியலின் பொது இயல்புகள்.

தொல்காப்பியத்தின் திரண்ட கருத்துக்கள் தமிழ் மக்களின் நடைமுறை வாழ்வியலின் விளக்கமேயாகும். நமக்கு முன்னே வாழ்ந்த நம் இனம் ஈடும் எடுப்பும் இன்றி ஓங்கி உயர்ந்து விளங்கிய வேளையில் எழுந்த இலக்கிய இலக்கண நூல் என்ருல் மிகையில்லை. தமிழ் மக்கள் எவ்வெவ் முறையில் வாழ்வில் பெருமை பெற்ருர்கள் என்பதைக் கவினுறக் காட்டும் நூல் தொல்காப்பியமாகும். இந்நூலிலும் கூட இடைச் செருகல் உண்டு என்று அறியும்போதுதான் அளவிறந்த துன்பம் உண்டாகின்றது.

இன்றுள்ள தமிழ் நூல்கள் அனைத்திலும் முந்திய நூல் என்றும், தமிழ் இனத்தின் வரலாற்றுக்குத் துணை என்றும் கருதப்படும் தொல்காப்பியத்தில்-மரபியலில் இடைச் செருகல் செய்தவர்கள் இடைக் காலத்தே வாழ்ந்தார்போலும். இடைச்செருகல்கள் என்பவை - ஆசிரியரால் பாடப்பெருல் பிற்காலத்தே வந்த பிற்போக்கு எண்ணமுடையவர்களால், தம் பழமைக் கருத்துக்களைப் பிறர் அறியக்கூடா வகையில் திறமையாகப் பாடிச் சேர்த்துவிடுதல். அவ்வாறு செய்த பெரியவர்கள் சேர்த்த இடம் சேருத இடமாக ஆனமையாலேயே நாம் அவற்றை இடைச் செருகல் என்று துணிந்து கூறுகின்ருேம். அவைபற்றி அடுத்த கட்டுரையில் நன்கு துணிவோம்.

தொடக்கத்தில் தமிழக மக்கள் தங்களுடன் உயிர் வாழ்ந்த உயிரினங்களை எவ்வெவ்வாறு அழைத்தனர் என்பதும், அவை தம் இயல்பு எத்தகையவை என்பதும், அவர்கள் கால மரபு எவ்வாறிருந்தது என்பதும் புலனுகுமாறு பல்வேறு சூத்திரங்களைக் கொண்டு விளக்குகின்ருர். அவரது கூற்றுக்கள் அனைத்தும் அன்றைய மக்களின் பொது இயல்பையும், வழக்காற்றையும் அடிப்படையாகக் கொண்ட உண்மைச் செய்திகளேயாகும்.

இந்த இயலில் மட்டும் சில மாறுபாடுகள் காணப் போகின்றன என்பதை நோக்க, சில உண்மைகள் புலனுகின்றன இன்று நமக்குக் கிடைக்கும் சங்க இலக்கியங்கள்என்பவைகளில் காணப்பெறு பலசெய்திகள் தொல்காப்பியரது விதிக்கு மாறுபாடாகக் காணப்படுகின்றன. "ஏன் அவ்வாறு மாறுபாடாக இருத்தல் வேண்டும்?" என்ற ஆய்வே சிலசெய்திகளை அறியத் துணை செய்கின்றது. அவற்றுள் தலையாயது தொல்காப்பியரது காலம் ஆகும். அதுபற்றிய விரிவான கருத்தை அடுத்த கட்டுரையில் காண்போம்.

பொது இயல்புகளை மேலெழுந்த முறையில் நிரல்படக் காண்பதே பயன் தருவதாகும். மரபியலின் தொடக்கத்தில் இளமைப் பொருள்களின் பெயர் முறை கூறப்படுகின்றது. பார்ப்பு, பறழ், குட்டி, குருளை, கன்று, பிள்ளை, மகவு, மறி, குழவி என்ற ஒன்பது சொல்லும் இளமையில் உயிர்வாழும் பொருள்களுக்குக் கூறும் பெயர்கள் என்ருர். ஆண்பாற் பெயரும், பெண்பாற் பெயரும் அடுத்தடுத்துக் கூறியுள்ளார். அதன்மேல் இளமைப் பெயர் இவை, இவை என்பனவற்றுள் எவை எவைக்கு எப்பெயர் பொருந்தும் என்பதை ஒவ்வொன்ருக உரைக்கும் பான்மை சிறப்பானது.

பறந்து செல்லும் பறவை இனத்தில் இளமையுடையன 'பார்ப்பு, பிள்ளை' என்று வழங்கும். ஆனல் ஆமையும் 'பார்ப்பு' என்று அழைக்கப்படுகின்றதே என்ற ஐயத்தை "தவழ்பவை தாமும் அவற்ருேரன்ன" என்ற 549-ம் சூத்திரத்தால் போக்கிவிடுகிருர். 'குட்டி' என்ற இளமைப் பெயர் கீரி, எலி, அணில், வெருகு என்பனவற்றிற்கு வரும். மேற்கண்ட நான்கும் 'பறழ்' என்றும் அழைக்கப்படலாம் என்கிருர். இவ்வாறு மற்ற சொற்களுக்குரிய விலங்கு, பறவை,

இராம. இராமநாதன்
பி.ஏ. (ஆனர்சு)

மரம், செடி, கொடி முதலியவற்றைக் கூறிச் செல்பவர், "குழவி, மகவு" இரண்டிற்கும் வந்தவுடன் கூறுகிருர்:

"குழவியும் மகவும்
ஆயிரண் டல்லவை
கிழவ அல்ல
மக்கட் கண்ணே"
(தொல். இளம்-567)

"குழவி, மகவு" என்று சொல்லப்பட்ட இரண்டு இளமைப் பெயர்கள் மட்டுமே மக்களுக்கு உரியவை என்கிருர். ஏனையவை மக்களல்லாத மற்றவற்றிற்கு உரியன என்று முடிவு செய்கிருர்.

தொல்காப்பியர் நல்ல உளநூல் வல்லுநர் என்பதைப் பலவிடங்களில் தக்க காட்டுக்களோடு கண்டோம். அத்தோடு உயிரினங்களைப் பாகுபடுத்தவும் வல்ல அறிஞர் என்பதை, அறிவியல் துறை விற்பன்னர் என்பதை 571 ஆம் சூத்திரம் காட்டுகின்றது. உலகில் உலவும் உயிர்கள்; உலவமுடியா செடி, கொடி, மரங்கள்; ஏனையவற்றையும் நன்கு ஆய்ந்துணர்ந்து இலக்கணம் ஆக்கியவர், பெரும் பேராசிரியர் தொல்காப்பியர்.

"ஒன்றறி வதுவே
உற்றறி வதுவே
இரண்டறி வதுவே
அதனொடு நாவே
மூன்றறி வதுவே
அவற்ருெடு மூக்கே
நான்கறி வதுவே
அவற்ருெடு கண்ணே
ஐந்தறி வதுவே
அவற்ருெடு செவியே
ஆறறி வதுவே
அவற்ருெடு மனனே
நேரிதின் உணர்ந்தோர்
நெறிப்படுத் தினரே"
(தொல்-இளம்-571.)

உலகில் வாழும் உயிர்க் கூட்டம் ஆறு வகைப்படும் என்று அளவிட்டு, அதற்கேற்ற வரையறையையும் வகுத்துத் தருகின்ருர் தொல்லாசிரியர்.

உடம்பினுல் மட்டும் அறிந்து செயல்படுவன ஓரறிவுடைய உயிர்கள். அவற்றிற்கு மற்றையப் புலன்களால் அறியும் ஆற்றல் இல்லை. அவை: புல், மரம் போன்றவை.

உடம்போடு வாயும் கொண்டு உணர்வன இரண்டறிவுடைய உயிர்கள். அவை: சங்கு, நத்தை.

உடல், வாயோடு மூக்கும் துணையாகி அறியும் உயிரினம் மூவறிவுடையன ஆகும். அவை: எறும்பு, அட்டை.

உடல், வாய், மூக்கோடு கண்ணையும் துணை கொண்டு பயன் தேடுவன நாலறிவுடைய உயிர்களாகும். அவை: நண்டு, தும்பி போன்றவை.

உடல், வாய், மூக்கு, கண்ணேடு செவிப்புலனும் சேர்ந்தறிவன ஐந்தறிவுடைய உயிர்கள் ஆகும். அவை, நாற்கால் விலங்குகள், பறவை, பாம்பு, மீன், முதலை போன்றவை.

இதுவரையிலும் இயங்கும் பொருள்களில் இருக்கும் உயிர்க்குரிய இயல்புகளைக் கூறினுர். அடுத்த சூத்திரத்தில் (577) மக்களின் இயல்பைக் கூறுகிருர். மேலே குறிப்பிட்ட ஐவகை அறிவோடு "மனம்" என்ற ஒன்றையும் எஞ்ஞான்றும் துணையாகக் கொண்டு வாழ்பவரே ஆறறிவுடைய மக்கள் என்ருர். தொல்காப்பியர் சொல்லதிகாரத்தின் முதற் சூத்திரத்தில் மக்கள் என்பவர் யார் என்பதற்குச் சரியான விளக்கம் தந்துள்ளார். மனம் இல்லா மகன் - மகள், மக்களாகார்; மாக்களேயாவர் என்பதை நன்கு விளக்குகிருர்.

"உயர்திணை என்மனுர்
மக்கட் சுட்டே
அஃறிணை என்மனுர்
அவரல பிறவே
ஆயிரு திணையின்
இசைக்குமன சொல்லே."
(தொல். சொல்-1.)

உலகில் மக்களாகப் பிறந்துவிட்டால் மட்டும் அவர்கள் உயர்திணை அல்லர். அவர்களை மக்கள் என்று சுட்டத்தக்க மனப்பண்பு என்ற ஒன்று இருந்தாற்ருன் "மக்கள்" என்றழைக்கலாம். அவ்வாறு "மனம்" இல்லா மக்கள் உயர்திணை ஒழிந்த அஃறிணைப் பொருளோடு சேர்ந்தவரே என்ருர்.

எனவே ஆருவது அறிவைப் பயன்படுத்தாதவர் ஐந்தாவது அறிவோடுதான் அஃறிணையாய்ச் சேர்க்கப் பெறுவர் என்பது புலனுகின்றது. மனத்தின் துணைகொண்டு மானத்தைக் காக்கவேண்டும் என்பதையும், நல்லன-தீயனவற்றை உணரவேண்டும் என்பதையும் அறிய முடியாதவன் மக்களில் சேர்க்கத்தக்கவன் அல்லன் என்பதையும் தொல்லாசிரியர் நினைவுப்படுத்துகிருர்.

இவ்வாறு ஆறறிவுடைய உயிர்கள் வரை கூறிய தொல்லாசிரியர் பெருமையை, அளவிட இயலாது. ஆனல் இச்சூத்திரம் 27 ஆவது இடத்தில் வந்துள்ளது. இது ஒரு வேளை நாலாவது இடத்தில் வந்திருப்பின் சிறப்பாகுமா? என்பதை வரும் கிழமை சிந்திப்போம்.

"ஆண்பால் எல்லாம்
ஆணெனற் குரிய
பெண்பால் எல்லாம்
பெண்ணெனற் குரிய
காண்பவை அவையவை
அப்பா லான"

என்ற 595 ஆம் சூத்திரம் வடமொழி மரபிற்கும், தமிழ் மொழி மரபிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்கி நிற்கின்றது. ஆண்பால் உயிர் எல்லாம் ஆண் என்றும், பெண்பால் உயிரெல்லாம் பெண் என்றும் வழங்கும். இது தமிழ்மொழி இயல்பு; வடமொழியில் 'மனைவி' என்ற ஒரு சொல்லே கூட ஆண்பால், பெண்பால், அலிப்பால் காட்டும் இயல்புடையது.

பார்யா-பெண்பால்.
தாரா-ஆண்பால்.
களத்ரா-அலிப்பால்.

மூன்று வேறுபட்ட சொற்கள் 'மனைவி' என்ற பொருளைக் குறிக்க வருதலால் வடமொழி கற்பனை உள்ளத்தால் செய்யப்பட்டது என்பர்.

33 ஆம் சூத்திரத்தில் மக்களைப் பேசியவர் 34-ல் விலங்கு, பறவையைப்பற்றிப் பேசத் தொடங்கி 71-ல் மீண்டும் மக்களுள் தொடர்பாகிய சாதி முறையைப் பேசுவதாகக் குறிக்கப்பட்டமை வியப்பாக உள்ளது. மரபியலில் இடைச் செருகல் உண்டு என்பதை முன்னரே கூறினேம். இதுபற்றிய விளக்கம் அடுத்து வரும் கட்டுரையில் காண்போம்.

★

அடுத்த கிழமை—
"மரபியலின் சிறப்பு."

திருமண அழைப்பு.

அன்புடையீர்!

நாளது 6-9-'59 காலை 10-மணியளவில் எமது மூத்த மகள் செல்வி சரசுவதிக்கும், திரு. பி. வரதராசுலு அவர்களின் செல்வன் சுதர்சனத்திற்கும், சென்னை லாயிட்ஸ் ரோடில் உள்ள தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடத்தில் திருமணம் நடக்கும். அறிஞர் அண்ணு அவர்கள் தலைமை ஏற்றுத் திருமணத்தை நடத்தி வைப்பார்கள். நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். தாங்களும் தவருது வந்திருந்து மணமக்களை வாழ்த்த வேண்டுகிருேம். வணக்கம்.

அன்பன்
சி. பி. சிற்றரசு.

★★நெஞ்சின் குமுறல்கள் சட்டமன்றில் வெடித்தன! காந்தியார் பெற்ற பிள்ளைகளின் சொற்கள் தடித்தன! குடுமியைப் பிடித்துக்கொள்ளும் ஒரு தாயின் பிள்ளைகள்! இவர்களுக்கெல்லாம் பதவி ஒன்றே குறிக்கோள்! அவர் இருந்தால் கட்டாயம் கண்ணீர் வடிப்பார்!

— முன் இதழ்த் தொடர்ச்சி —

போராட்டக் காட்சிகள் உச்ச நிலைக்குச் சென்றுவிட்டன என்பதைக் கடந்த கிழமை எழுதியிருந்தோம். போராட்டம் உருவானது எப்படி? இந்த நிலை வளர்ந்தது எப்படி? இனி வரும் காட்சிகள் எவையெவை? இவற்றைஅறிவோம்.

உத்தரப் பிரதேசம் ஒரு மாநிலம் மட்டுமன்று; விண் மீன்களின் போராட்டக் களமுங்கூட. சம்பூரணானந்தர், அல்குராய் சாஸ்திரி, குப்தா, முதலிய பல அரசியல் விண் மீன்கள் போட்டியிடுகின்றன. இவற்றில் எவையெவை விண் மீன்கள்? எவையெவை எரி நட்சத்திரங்கள்?— தீர்க்கப்பட வேண்டிய இச்செய்திக்காகத்தான், அவை போட்டி போட்டுக்கொண்டு ஒளிர்கின்றன. சில இரவல் ஒளியிலும், சில தலைமையிடம் தரும் ஒளியைப் பிரதிபலிப்பதிலும் திளைத்துகொண்டு இருக்கின்றன. மொத்தத்தில் இவை ஒளிகொட்டி மக்களுக்கு வழிகாட்டுவதைவிட, தமக்கே வழி தெரியாமல் விழிக்கின்றன. அத்தோடு தாம் பெற்ற இரவல் ஒளியால் மக்கள்கண்களைப்பறித்துப் பாதையை இருளாக்குகின்றன. எப்படியோ சம்பூரணானந்தர் அமைச்சரவை நீடிக்காது; நிலைக்காது என்ற நிலை உருவாகிவிட்டது. குப்தா என்பவர் தனக்கும் சம்பூரணானந்தருக்கும் இரண்டாண்டுகளாய் இருந்து வந்த திரை மறைவுச் சண்டையை வெளிப் படையாக்கிவிட்டார்; பெரிதாக்கிவிட்டார். அவர்களுக்குள் தனிப்பட்ட முறையில் இருந்து வந்த சில்லரைப் பூசல்கள் பெரிதாகி, மாநிலத்தின் ஆட்சியைக் குலைக்கு மளவுக்கு வளர்ந்துவிட்டன. குப்தா குழுவினர் குற்றச் சாட்டுக்கள் பலவற்றை இந்திராவின் திருவடியில் படைத்து, "தேவியே! நாடாள்பவர் திருமகளே! நீ பிறந்த மாநிலத்தில் சம்பூரணானந்தர் செய்யும் தவறுகளைக் காண்க! மாநிலத்தின் ஆட்சி குலைவதா? மண்டிடும் ஊழலும் சுரண்டலும் பாரத மாதாவின் திருப்பெயரில் கரி பூசுவதா? ஏற்கிறதா உன் நெஞ்சம்?" என்றனராம். சம்பூரணானந்தர் தலைமையரிடத்திற்குப் பறந்து சென்றாராம். "என்மீது களங்கச்சுவடி வரைந்த கைகளும் கறைபடிந்த கைகள்தாம்! தேவியே! தூற்றல் கணைகளைத் தாங்கும் ஆற்றலும், தொண்டுக்குச் சளைக்காத பண்புள்ளமும் என்னிடம் உண்டு. என்றாலும், என்மீது குற்றம் ஏதும் இல்லை என்பதைக் காட்டக் கடமைப் பட்டுள்ளேன். குப்தாவுக்குப் பதவிப் பித்து! குறுகிய அந்த ஆசையால் குடும்பத்தையே குலைக்கப்பார்க்கிறார்! கொடுஞ்செயல் இதற்கு நீங்கள் துணையிருக்கக்கூடாது!" என்றாராம் அனைத்து ஆற்றலும் படைத்த ஆசானும் நேருவும்! அவரது மகள் இந்திராதேவியும் பிறரும் சம்பூரணானந்தரின் பேச்சுக்குச் செவிமடுத்து, "பார்த்தோம் விளக்கத்தை; தீர்த்தோம் உம் கலக்கத்தை! இனி உமக்கு நீரே மன்னர்! உமக்கே ஆட்சி! எங்கள் அப்பன் வீட்டுச் சொத்தான இந்த ஆட்சியை உமக்கே இன்னும் இரண்டாண்டுகளுக்கு எழுதித் தருகிறோம்!" என்ற பொருள்படச் சொல்லிவிட்டனராம். உடனே, நெஞ்சக் கலக்கத்தோடு சென்றவர் வெற்றி முழக்கத்தோடு திரும்பியிருக்கிறாராம். சம்பூரணானந்தர் தில்லியிலிருந்து திரும்பிய நாள் முதல் ஆடிப்பாடிக் களிக்கிறாராம்.

"பதவி நாற்காலி உருட்டப்படும்! திரைமறைவில் வேலைகள் நடக்கின்றன!" என்றறிருந்திருந்தும் அவற்றையெல்லாம் அறியாதவர்போல, நடந்துகொள்கின்றாராம். அவர் மீது நம்பிக்கையில்லை என்று அவரது இயக்கத்தைச் சேர்ந்தோரே சொல்லிவிட்டனர். சொன்னோர் 98 பேரும் சட்டமன்றில் இருக்கும் காங்கிரசு உறுப்பினர்கள். அன்னார் தம் குற்றச்சாட்டுக்களைக் கூறிய இடமோ சம்பூரணானந்தர் வீற்றிருக்கும் சட்டமன்றம். செய்ததோ நெஞ்சை உலுக்கும் நிகழ்ச்சி. என்றாலும், சம்பூரணானந்தர் தான் குற்றம் சாட்டப்பட்டஅன்று மாலை பசனை மண்டபத்திற்குச் சென்றிருக்கிறார். மறுநாள் மாலை ஒரு "சர்க்கஸ்" விளையாட்டுக்குச் சென்றிருக்கிறார். தம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்லித் தீர வேண்டிய நாளன்று, பொழுது போக்கில் ஈடுபட்டிருக்கிறார். முதலமைச்சரின் போக்கு முறையானதுதானா? இல்லை! மேலிடத்துத் துணை தனக்குண்டு என்ற துணிவில்ஆணவமாகத் திரிகிறார். ஆனால் அவர் நினைப்பதுபோல, குப்தா குழுவினர் அவ்வளவு எளியோரல்ல. முதலமைச்சர் கையாளும் எந்தக் கருவியையும் அன்னாரும் கையாளத் தயங்கார். அத்துணைக்கும் அன்னார்க்கு வாய்ப்புமுண்டு.

குப்தாவும் அம்மாநிலத்தின் பழைய அமைச்சர். அவரது பேச்சுக்குப் பணிந்து அவர் பின்னே நிற்கும் சட்டமன்ற உறுப்பினர் 98 பேர். முதலமைச்சரின் ஆழ்வார்கள், முதலமைச்சர் தில்லிக்குச் செல்லும் முன்னர் கூறினர். "நீங்கள் தில்லியிலிருந்து திரும்புவதற்குள் திசை மாற்றிவிடுவோம் 30 எதிர்ப்பாளர்களையாகிலும். இன்று உங்களைக் கண்டித்து நிற்போருள் 30 பேர் நாளை உம்மை மாலை சூட்டி வரவேற்கச் செய்கிறோம்!"

ஆழ்வார்கள் இப்படிச் சொன்னதை நம்பிச் சென்று திரும்பிய முதலமைச்சர் கண்ட காட்சியோ வேறுதான். எல்லா வழிகளும் கையாளப்பட்டும் மூன்றே மூன்று பேர்தான் சம்பூரணானந்தர் மருங்கு திரும்பியிருக்கின்றனர். அவர்கள சொற்படி, "திருந்தி"யிருக்கின்றனர். அந்த மூன்று பேரை வளைத்துவிட்டாலும், மிகப் பெரும்பான்மையை அவர்கள் பெற்றுவிட்டதாகப் பெருமையடித்துக்கொள்ள முடியாது ஏதோ சற்றுத் தப்பிப் பிழைத்திருக்கின்றனர். முதலமைச்சரின் ஆழ்வார்கள் மூன்று பேரைத் தம் பக்கம் இழுத்துவிட்டதாகப் பெருமைப்படும் இந்நேரத்தில், குப்தா குழுவிற்கு மேலும் ஐவர் புதிதாக வந்திருப்பதாக வேறு பேச்சு அடிபடுகிறது. நிலைமை மீறுவதைக் கண்ட காங்கிரசுத் தலைமையிடத்தார், குப்தாகுழுவினைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சுசுல் கிசோருக்கும் முன்னாள் துணை அமைச்சர் மங்களா பிரசாத்துக்கும் அறிக்கை ஒன்றனுப்பியிருக்கின்றனர். "முதலமைச்சர் ஆட்சியை எதிர்ப்பதற்கான அடிப்படைகளைக் காட்ட வேண்டும். அன்றேல் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்!" என்று விடப்பட்ட அவ்வறிக்கைக்குப் பிறர் தெரிவித்துள்ள கருத்து இது: 'எங்கள் தலைவர்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் நாங்கள் அத்துணை பேரும் உடனடியாகச் சட்டமன்றை விட்டு வெளியேறுவோம், எங்கள் தலைவர்களுடன்!"

எதிர்ப்பு அணியினர் இவ்வளவு விரைப்பாகப் பதிலளித்ததோடு, சட்ட மன்றில் முன்னாளமைச்சர் சரன்சிங்கைத் தங்கள் தலைவராகவும், மேல்அவையில் அல்குராய் சாஸ்திரியைத் தங்கள் தலைவராகவும் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். இவர்கள் இருவரும் அம்மாநில அரசியலில் தகர்க்கமுடியாத இடம் பெற்றுள்ளோர் ஆவர். இவை எல்லாம் முதலமைச்சரை வாட்டுகின்றன.

ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது; அதனால்தான் இந்த அமைச்சரவை மேல் நம்பிக்கை இல்லை என்று சொல்கிற குப்தா, தனது கூற்றுக்குச் சாதகமாகக் காட்டும் குறிப்புக்கள், பல. அதில் ஒரு குறிப்பு 50 பக்கங்களுக்குமேல் செல்கிறது. தற்போதைய அமைச்சரவையினர் செய்த ஊழல்களும் மோசடிகளுமே அந்த ஐம்பது பக்கங்களிலும் அடங்கியிருக்கின்றன. அவைஅனைத்தும் ஆட்சியின் மறைமுக எழுத்துச் சான்றுகளிலிருந்துதிரட்டப்பட்டவை. அவற்றின் ஒரு பகுதி செய்தியாளர்கட்கும் எட்டிவிட்டனவாம். வெள்ளம் தலைக்குமேல் போன பின்னர்தான் - கள்ளம் கையும் களவுமாகப் பிடிபட்ட பின்னர்தான், சம்பூரணானந்தர், கவலையை உணர்கிறார்.

அம்மாநிலக் காங்கிரசின் கிளைகளெல்லாம் குப்தாவின் பேச்சைக் கேட்பனவே. சட்டமன்றில் மட்டும் தான் முதலமைச்சரின் ஆதிக்கம் எனவே, காங்கிரசுக் கிளைகளைத் தூண்டிவிட்டு, அவற்றின் கையில் ஊழல் பட்டியலைத் தந்திருக்கிறார் குப்தா. "ஊழல்கள் ஓராயிரத்தை இப்படி வளர்த்திருக்கும் ஆட்சி நிலைக்க வேண்டுமா?" என்று கேட்கிறார், குப்தா.

— 12ம் பக்கம்

பாரதம் எங்கும் சோதரர் போர்!



வேதநாயகத்தின் இலக்கியப் பணி

தமிழிலக்கியம் என்றும் ஒன்று போலவே இருந்ததில்லை என்பதும், காலத்திற்குக் காலம் பல்வேறு காரணங்களால் அது மாற்றம் அடைந்துகொண்டே வந்தது என்பதும் தமிழுலகம் அறிந்த உண்மைகளாகும். இத்தகைய மாற்றங்களைத் தோற்றுவித்த பெருமை பல்வேறு புலவர்களையும், அறிஞர்களையும் சாரும். இவ்வாறு மாற்றம் தோற்றுவித்த பெருந்தகைகளில் ஒருவரே வேதநாயகம் என்னும் பெயர் பெற்ற புலவராவார் தமிழிலக்கியத்தின் முப்பெரும் பிரிவுகளில் கடைப்பட்டதாகிய இன்றைய இலக்கியத்தைத் தோற்றுவித்த பெருமை இவரையே சாரும். எனவே இவரைத் தமிழிலக்கியத்தின் 19-ம் நூற்றாண்டின் திருப்புமையம் என்று கூறின் மிகையாகாது.

தமிழிலக்கியத்தில் முதற் புதினம் (Novel) எழுதியவர் இவர் என்பது பலர் அறிந்த உண்மையாகும். ஆனால் அப்புதினம் தகுதியிலும் முதன்மை பெற்று விளங்குகிறது என்பதைப் பலர் அறியார். புதினம் என்று கூறின உடனே 'கற்பனை' என்றுதான் பலருக்கும் நினைவு வரும். கற்பனையுலகில் தங்கு தடையின்றி திரிந்து வருவதே புதினத்தின் நோக்கம் என்பது பலருடைய துணிபு. ஆனால் சிறந்த புதினம், அது எழும் மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிப்பதாகும்; அவர்களை முன்னேற்ற முயற்சிப்பதாகும். இத்தகைய சீரிய பண்புகளிரண்டையும் பெற்று இனிதே விளங்குவது வேதநாயகத்தின் பிரதாப முதலியார் சரித்திரமாகும்.

பிரதாப முதலியார் சரித்திரம் நகைச் சுவை ததும்பும் நூல் என்பதே பலருடைய எண்ணம். ஆனால், அதோடுமட்டுமல்லாது, இது சீர்திருத்தக் கருத்துக்களின் பெட்டகமும் ஆகும். மேதை வேதநாயகம் அவர்கள் தாம் வாழ்ந்த காலத்து மக்களை நன்கு கூர்ந்து நோக்கி அவர்கள் தம் குறைகளைக் குறித்ததோடல்லாது, அவற்றைப் போக்குதற்குரிய வழி வகைகளையும் கூறியுள்ளார்.

இவற்றிற்குப் புதினத்தில் ஏது இடம் என்று கேட்கத் தோன்றும். ஆனால் அவர் தம் புதினத்தை அமைத்திருக்கும் முறையே புதுமையானதாகும். பிரதாப முதலியார் தாமே தம் வாழ்க்கையைக் கூறிச் செல்வதுபோல் அமைத்துள்ள தன்மை நவில் முறை (First person narration) மிகவும் வியக்கத்தக்கதாயுள்ளது. அத்துடன் இடை இடையே பல சிறுகதைகளையும், நகைப்பிற்குரிய சிறு நிகழ்ச்சிகளையும் கூறும் முகத்தான் இவர் தம் சீர்திருத்தப் பணியைச் செவ்வனே செய்துள்ளார். தான் வாழ்ந்த காலத்து மக்களின் குறைகளையும் மூட நம்பிக்கைகளையும், நகைச்சுவை, அங்கதம் முதலிய சுவைகளுடன் கலந்து யாரையும் புண்படுத்தாமல் கூறுவதுடன், பல்வேறு நல்ல கருத்துக்களையும் நூல் முழுவதும் வழங்கியுள்ளார்.

எடுத்துக் காட்டாகப் "பிறப்பும் கல்விப் பயிற்சியும்" என்ற பகுதியில் செல்வர் தம் குழந்தைகள் பள்ளியில் சென்று படிப்பது, பெற்றோர்க்கு எவ்வளவு மனக் கசப்பைத் தருகிறது என்றும், பிரதாபனுக்குப் படிப்பு வர வேண்டும் என்பதற்காக, அவனுடன் படிக்கும் ஏழை மாணவன் கனகசபை என்பவன் அடிபட வேண்டியுள்ளது என்று படிக்கும்பொழுது, செல்வர்களின் செருக்கு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அது போன்றே இளமை விளையாட்டு என்ற பகுதி மிகவும் நகைச் சுவை அமைந்திருப்பதுடன் நல்ல கருத்துக்கள் அமையப்பெற்றுள்ளது. முக்கியமாக 'இராமாயண நிகழ்ச்சியை மாற்றுதல்' என்ற நிகழ்ச்சி நம் உள்ளத்தைத் தொடுவதாக உள்ளது. இராமரும், அவருடைய தம்பியும், சீதையும் காட்டிற்குப் போகாமல் தடுத்து அந்நாடகத்தைப் பார்க்க வந்தவர்களின் துன்பத்தைக் குறைத்தும், இராவணன் சீதையை சிறை எடுத்தானென்னும் இழி சொல் இல்லாமல்" செய்த பிரதாபனின் உள்ளக் கருத்து உன்னதத்தக்கது

மற்றும் 'கனகசபை வரலாறு' என்ற பகுதியில் அண்ணனின் பாளையத்தைப் பெற விரும்பி அண்ணன் மகனைக் கொல்லத் துணியும் கொடிய நிலையும், பின்னர் அவன் மீட்டுக் கிடைத்த பிறகு அவனே (கனகசபை) பாளையக்காரரின் (தேவராசப் பிள்ளை) மகன் என்று மெய்ப்பிக்க அவர்கள் பட்ட பாடும் நன்கு சிந்திக்க வேண்டியன. தேவராசப்பிள்ளையின் தங்கைமகனைப்பெற விரும்பிய அம்மாவட்டத் தலைவர், அது தவறிவிடுமே என்று அஞ்சி, அவன் அவருடைய சொந்த மகனில்லை என்றும், பாளையம் பறி போகாமல் இருக்க பிள்ளையவர்கள் செய்யும் சூழ்ச்சி என்றே மாநிலத் தலைவர்க்கு அறிவிப்பதும், மாநிலத் தலைவர் மூன்று நடுவனர்களை ஆராயுமாறு அனுப்புவதும், நடுவனர்களில் இருவர் மாவட்டத் தலைவரின் அன்புக்கும், பொருளுக்கும் பாத்திரமாகி அவர் பக்கமாகவே தீர்ப்பு வழங்கி, தேவராசப் பிள்ளை உள்பட சான்று கூற வந்தவர்களையும் சேர்த்து இருநூறு பேரைத் தீவுக்கு அனுப்ப முடிவு செய்வதும் வெறும் கற்பனை நிகழ்ச்சிகள் என்று கூறுவதற்கில்லை. அன்றைய அரசியல் அமைப்பில் தோய்ந்திருந்த ஊழல்களையே விளக்கினர் என்று கொள்வதே பொருத்தமானது.

புலவர் வேதநாயகம் அவர்கள் பெண்குலத்தின் பெருமையிலும், அன்பு நெறியிலும் மிக்க நம்பிக்கை உடையவர் என்பதை அவர் நூல் முழுவதும் தெளிவாக்கியுள்ளார். பிரதாபனின் தாயார் சுந்தரத்தண்ணி, பிரதாபனின் மனைவி ஞானம்பாள் ஆகிய இருவருமே பெண்ணின் பெருமையின் எடுத்துக் காட்டுக்கள். தங்கள் கற்பினை அருமையாகப் போற்றிப் பாதுகாத்ததுடனல்லாது, தம் கணவர்களுடன் அன்பு சற்றும் குறையாமல், வாழ்க்கையில், அவர்கள் தவறே செய்ய நேரிடினும் அவர்களை அன்பும் பண்பும் தவறுவண்ணம் திருத்திய பெருமையும் அவர்களைச் சாரும். மற்றும் தம் கணவரும் மற்றவர்களும் தவறான முறையில் சிறைப்பட்டபோது சுந்தரத்தண்ணி, ஞானம்பாளும் மற்றும் பல பெண்களும் பின்வர மாநிலத் தலைவரிடம் அஞ்சாது சென்று வழக்குரைத்து நீதி பெற்ற சிறப்பும், ஞானம்பாள் தற்செயலாக ஒரு நாட்டுக்கு அரசாளும் பொறுப்பேற்றபொழுது அரச இனத்துக்கே பெருமை ஏற்படும் வகையில் அரசாண்ட சிறப்பும் எண்ண எண்ண இறும்பூது பயப்பனவாம் மற்றும் கற்பலங்காரி வரலாறு என்ற கதையில், நடைபெற்ற நிகழ்ச்சியொன்றைக் குறித்த வேதநாயகம் அவர்கள், மன்னனே அலைக்கழித்தபோதும் உயிரினும் சிறந்ததாகத் தன் கற்பினைப் போற்றிய கற்பலங்காரியின் பெருமையும், அவளுக்கு நேர்ந்த இன்னலை அறிந்த இராணி மங்கம்மாள், அவளுக்கு எண்ணற்ற தொல்லை தந்த காமியப்ப நாயக்கனைத் தம்பியென்றும் பாராது கொல்லும்படி ஆணையிட்ட மங்கம்மாளின் நேர்மைச் சிறப்பினையும் உயர்ந்த வகையில் விளக்கியுள்ளார்.

மேலும், ஆசிரியர் தான் வாழ்ந்த காலத்தில் நாட்டில் நிறைந்திருந்த குறைகள் பலவற்றையும், "பகற் கொள்ளைக்காரர்கள்" என்ற பகுதியில் குறித்துள்ளார். ஆளும் பொறுப்பேற்றுள்ள அதிகாரிகள், எவ்வாறு மக்களிடம் கொள்ளை அடிக்கிறார்கள் என்பதை நன்கு விளக்கியுள்ளார். குறைகளைக் கூறிய ஆசிரியர் அதோடுவிடாது அவற்றைப் போக்குதற்குரிய வழி வகைகளையும் 'சீர்திருத்த ஏற்பாடுகள்' 'குடிகளுக்குச் செய்ய வேண்டிய நன்மைகள்' என்ற பகுதிகளில் வகுத்துக் கூறியுள்ளார். எல்லா வகையான குறைகளுக்கும் அடிப்படையாக உள்ள கைக்கூலியை (இலஞ்சம்) ஒழிக்கும் வழிகள் சிலவற்றை ஆசிரியர் குறித்துளளார். ஒவ்வொருவருக்கும் நிறைய ஊதியம் கொடுத்து எத்தகைய குறையும் இல்லாமல் செய்துவிட்டால் நாட்டில் கைக்கூலிப் பழக்கம் குறைந்துவிடும் என்றும், அதற்கும் மீறி வாங்குபவர்களை எள்ளளவும் ஈவு இரக்கம் காட்டாமல் ஒறுக்க வேண்டும் என்றும் விளக்கியுள்ளார்... 'சீர்திருத்த ஏற்பாடுகள்' என்ற பகுதியில் முக்கியமாக, வழக்கு மன்றங்களிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி, அவற்றைப் போக்கும் முறைகளை விளக்கியுள்ளார், முதன்மையாக, வழக்கறிஞர்கள் தமிழில் வாதாடுவதை விடுத்து, தமக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் உளறி வழக்குகளில் தோற்றுப் போவதை, நகையாடுவதன் மூலம் வன்மையாகக் கண்டித்துள்ளார். "ஆங்கிலத் தொடர்களுக்கேற்ற தமிழ்த் தொடர்கள் தமிழ் மொழியில் இல்லை என்று வழக்கறிஞர்கள் உரைப்பது அவர்களுடைய அறியாமையேயல்லாமல் உண்மையன்று" என்று அவர் எழுபது ஆண்டுகட்கு முன்னரே தெரிவித்துள்ளார். எனினும், சிலருக்கு இப்பொழுது கூட அது இயலுமா என்ற ஐயம் இருந்துகொண்டே இருக்கிறது.

வேதநாயகம் அவர்கள் மிக்க தமிழ்ப் பற்றுடையவர் என்பதில் ஐயமில்லை... ஆங்கில மோகத்தால் சில அரைகுறைப் படிப்பாளிகள் அல்லலுற்றுப் போவதை சில எடுத்துக் காட்டுகள் மூலம் நன்கு விளக்கியுள்ளார். தமிழின் பெருமை என்ற தலைப்பில் ஆசிரியர் உரைப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. "எண்ணிறந்த திருக்கோயில்களும், அறச்சாலைகளும், நீர்வளமும், நிலவளமும், நாகரிகமும், ஒழுக்க முறைகளும் நிறைந்த இந்தத் தமிழ்நாடு, மற்றைய நாடுகளிலும் சிறந்ததென்றும், அப்படியே தமிழ மொழியும் எல்லா மொழிகட்கும் மேலான மொழியென்றும் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அகத்தியரால் வளர்க்கப்பெற்று, ஆரியத்தால் அழிக்கப்படாது, ஆந்திரம் முதலியமொழிகளையும் ஈன்றெடுத்து, சங்கப் புலவர்களுடைய வாக்கிலே விளையாடி, திராவிட நாடு முழுதும் ஆட்சி செலுத்தி வந்த தமிழ் அரசியை இப்பொழுது இகழலாமா?" என்று தமிழின் பெருமையை ஐயமறக் குறித்துள்ளார்.

கதையின் போக்கு சிறிதும் தட்டுப்படாமல், இவ்வாறு எண்ணிறந்த சிறந்த கருத்துக்களைக் அவர் அள்ளி வீசி இருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். இவ்வாறு கதையையும் சீர்திருத்தக் கருத்துக்களையும் இரண்டறக் கலந்து சுவை குன்றாது தரும் முறையில், ரஷ்ய நாட்டு நாவலாசிரியர் டால்ஸ்டாய்க்கு ஈடானவர் நம் அறிஞர் வேதநாயகம் அவர்கள், என்றால் அது மிகையாகாது.

- பா. இளவழகன் எம். ஏ.

தமிழில் ஒரு புதுமை!

மா. கி. தசரதன் எம். ஏ.

எழுதிய

"தணலில் தங்கம்"

விற்பனை உரிமை:

"தென்றல்", சென்னை-6.

தனிப் பிரதி ரூ. 1-50.

தபால் செலவுடன் ரூ. 1-60.

விற்பனையாளருக்குக் கழிவு 20%.

தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

கடமையென்று வெளிப்படையாகப் பேசினார்கள். கம்யூனிஸ்ட்டுகளும் எதிர்ப்பு அணியினரின் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள்; கிளர்ச்சிகளை நிறுத்திவிட்டு சமாதானம் பேச வாருங்கள் என அழைத்தார்கள்; கேரளத்தில் அமைதி நிலவ ஒத்துழைப்பினைத் தாருங்கள் எனவும் வேண்டிக்கொண்டார்கள். கத்தோலிக்கப் பாதிரிமார்களும், ஈழவ சங்கத்தினரும் ஒன்றாக நின்று அழைப்பினைத் தள்ளிவிட்டனர். கம்யூனிசத் தத்துவத்தின் மதப்பகுதியை மறந்துவிட்டவர்கள், இஸ்லாமியர்களுக்காக மசூதிகள் கட்டிக்கொடுத்திருப்பதைத் தங்களின் சாதனைகளில் ஒன்றாகக் குறிப்பிட்டுக் காட்டினார்கள்! மதவாதிகள், மதவெறியர்கள் இவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. நாளுக்கு நாள் கிளர்ச்சியினைத் துரிதப்படுத்தவும், சிக்கல்களை அதிகமாக உருவாக்கவுமே தங்களது சிந்தனையையும் செயலையும் பயன்படுத்தினர். எண்ணமெல்லாம் சர்க்காரைக் கவிழ்க்கவே!

இந்தியத் துணைக்கண்டத்திலேயே பாக்கும், தேக்கும், அகிலும், கமுகும் அதிகமாகக் கொண்ட கேரளம், தென்னந்தோப்புகளை வளர்த்துள்ள அன்னையர் நாடு, யானைத் தந்தமும், மிளகுக்கொடிகளும் படர்ந்து கிடக்கும் தாயகம் அரசியல் புயலிடைச் சிக்கி அழகின் சிரிப்பிழந்தது! மலைஞாலத்தில் மத வேழங்கள் திமிர் நடை போட்டனர்! மன்னத்துக்குப் பின் நின்ற மதத்தரகர்கள், பொது மக்களை வெறிச் செயலுக்குத் தூண்டினர். எதை எதையோ எதிர்பார்த்து ஏமாந்த கேரளத்து மக்கள், இவர்களின் ஆசைகளுக்குப் பலியானார்கள்! போலீஸ் படையினர் கலகக்காரர்களிடத்திலே பிடிபட்டு மீளமுடியாமல் தவித்தனர். பெரியதோர் படை வந்துதான் அவர்களை மீட்டது. கும்பலைக் கலைக்க துப்பாக்கிப் பிரயோகம், போலீஸ் வேட்டைகள்! தண்ணீர் எடுத்துச் சென்ற ஒரு தாய், தாய்மையுற்றிருந்த ஓர் மாதா துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தானும் இரையாகி தன் வயிற்றிலே வளர்ந்து வரும் செல்வத்தையும், இரத்த உணவாக்கினார்! இங்கே தான் விரட்டியடிக்கப்பட்ட மீனவர்கள் கடலிலே சென்று விழுந்தார்களாம். அப்போதும் அதிகாரிகளால் அடிக்கப்பட்டார்களாம். கடலலைகளையும் தோற்கடித்தன போலீசாரின் முயற்சிகள். இங்கேதான் ஒரு சப் இன்ஸ்பெக்டர் கல்லடி பெற்றார். தன்னைச் சூழ்ந்தோரைத் தாக்க தன் கைத் துப்பாக்கியைப் பயன்படுத்தினார். அது தன் கடமையைச் செய்தது! களத்திலே நின்ற கலெக்டர் கட்டளையிட்டார் சுட வேண்டாம் என்று. ஆனால் அடிபட்டு வேதனையுற்ற அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் கலெக்டரின் ஆணைக்கு அடங்கவில்லை! ஹிட்லர் முறையென்று சொல்லப்படும் மனிதன் சாகாமல் சித்திர வதைப்படும் வகையில் எலும்புக்கு எலும்பு அடி விழுந்ததாம். அங்கமாலி துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தவர்களுடைய குடும்பத்தினர் சொன்ன செய்தி இது! கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் போலீஸ் லாரியிலே இருந்தார்கள், அதனைப் புகைப்படமெடுக்கச் சென்ற ஒரு பத்திரிகை நிருபரை அடித்து அவருடைய 'காமிரா'வைக் கைப்பற்றிக்கொண்டார்கள்! கொல்லப்பட்டவர்களின் பிணங்களைக்கூட கொடுக்க மறுத்தார்கள். அதற்காகவும் ஒரு கண்டன நாள் எனத் தெரிவித்தனர் கிளர்ச்சித் தலைவர்கள்! கல்லூரிகளை விட்டு வெளியேறிய மாணவிகள், கொல்லப்பட்டவர்களின் நினைவு நாளாக வேலை நிறுத்தம் செய்ய வேண்டிக் கேட்டுக்கொண்டனர். ஊர்வலம் வந்த மாணவியரைப் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லாமல் பக்கத்திலேயிருந்த "ஹோட்டல்" அறையில் அடைத்து வைத்தார்கள்! அதனைக் கேள்விப்பட்ட சட்டசபை உறுப்பினர் ஒருவர், உயர் அதிகாரிகளிடம் சொல்லி மீட்டுவித்தார்! இப்படியெல்லாம் பல ரகமான இழி செயல்களைத் தினம் தினம் ஏடுகள் நமக்குத் தெரிவித்தன. கொடுமைக்காளான கேரள மக்களின் துன்பக் கதைகள் தொடர்ந்துகொண்டேயிருந்தன.

இந்தியப் பிரதமர் நேரு, பாரதத்தின் பண்புடைத் தந்தையான பண்டிதர், கேரளத்திலேயிருந்து வந்த அரசியல் வெப்பத் துளியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் 'சிம்லா'வுக்குச் சென்றார் தனிமையில் ஓய்வெடுக்க! அங்கேயும் அவரை எவரும விட்டு வைக்கவில்லை. கேரளத்துச் சங்கரன் நம்பூதிரிபாத் நேருவைச் சந்தித்தார். கேரளத்தில் எதிர்க் கட்சியினர் பொதுமக்களின் பெயரால் செய்திடும் கேரளச் செய்கைகளைப் பட்டியலாக்கித் தந்தார்! மத்திய சர்க்காரின் ஆதரவு கிளர்ச்சிக்காரர்களுக்கு இல்லையென்றால், தன்னுடைய சர்க்கார் மக்கள் எழுச்சியெனப்படும் கலவரத்தை $1\frac{1}{2}$ மணி நேரத்தில் அடக்கிவிடும் என்று உறுதியோடு சொன்னார். அத்தனையும் கேட்டுக்கொண்ட அலகாபாத் நேரு, அருமையான விருந்து வைத்தார். அங்கே கிடைத்த மீன் உணவின் ருசியைப்பற்றி, சங்கரன் ரசித்துப்பேசினார் நிருபர்களிடையே! காஷ்மீரத்துப் பார்ப்பனரும், கேரளத்துப் பார்ப்பனரும் மாமிச உணவு சிறந்ததா, மீன் உணவு சிறந்ததா என ஆராய்ந்துகொண்டிருந்த நேரத்தில், கேரளத்தில் பிணங்கள் சரிந்து விழுந்து எண்ணிக்கை 15 என்று உயர்ந்துகொண்டிருந்தது! இரண்டு பகுதித் தலைவர்களையும் பத்திரிகை நிருபர்கள் இடைவிடாமல் பேட்டி கண்டு திணறடித்தார்கள் – சிக்கலான கேள்விகளைக் கிளப்பி முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகின்ற தலைவர்களைப் பார்த்துச் சிரித்தார்கள். சிம்லா சென்று திரும்பிய 'கேரளப் பார்ப்பனரை'யும் பேட்டி கண்டார்கள். "உங்கள் சர்க்காரின் கொள்கை கம்யூனிஸ்ட் கட்சியின் நலன்தான்" என்று சொல்லப்படுவது உண்மையா என்று ஒரு நிருபர் கேட்டார். "கட்சி நலன் பேணவில்லை" என்றார் சங்கரனார். உடனே வேறோர் நிருபர் கேட்டார் "அப்படியானால் சர்க்காரின் ரிக்கார்டுகளைப் பார்வையிட இசைவு தருவீர்களா?" என்பதாக. உடனே சங்கரன் நம்பூதிரி, மிக வேகமாகவும் கண்டிப்பாகவும் சொன்னார், "அதுமட்டும் முடியாது" என்ற வார்த்தைகளில்! எதிர்க் கட்சியினர் இந்த மூன்று வார்த்தைகளை வைத்துக்கொண்டு முப்பதுக்குமேல் கேள்விகளை அடுக்கினார்கள்! கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் போலீசாருக்குத் துணையாகத் துப்புத் துலக்குவோராக உள்ளனர், புதிதாகச் சேர்க்கப்பட்ட படைகளில் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களுக்கே முதலிடம், சர்க்கார் பணஉதவி கம்யூனிஸ்ட்டுகள் ஆதிக்கம் வகிக்கும் கூட்டுறவுச் சங்கத்திற்குமட்டுமே என்பன போன்ற சர்க்காரின் பாரபட்சமுள்ள நடவடிக்கைகள் வெளிப்பட்டுவிடுமென்பதாலேதான், சங்கரன் நம்பூதிரிபாத் "அதுமட்டும் முடியாது" என்று சொல்லியிருக்கிறார், என்பதாக எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லோரும் சொன்னார்கள். "இதுமட்டும் ஏன் முடியாது" நம்பூதிரியாரே எனக் கேட்டார்கள்!

இந்தியப் பிரதமர் நேரு சிம்லாவிலிருந்து புதுடில்லி திரும்பினார். அமைச்சர்களுடன் தொடர்ந்து நான்கு நாட்களுக்குமேல் விவாதித்தார். கேரள கவர்னரின் அறிக்கைகளையும் மிகக் கவனமாகப் படித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் அஜய்கோசும், கடைசி நேரத்தில் பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேசிவிட்டார்! எப்படியாவது கேரளநிகழ்ச்சிகளுக்கு ஒரு முடிவு காணுங்கள் என்று அவரும் வேண்டிக்கொண்டார்! கேரள கம்யூனிஸ்ட் அமைச்சரவையை 'டிஸ்மிஸ்" செய்து வெளியேற்றிவிடுங்கள், என்று குடியரசுத் தலைவரும் தலையாட்டிவிட்டார். ஆனால் அவருடைய உத்திரவு திருவனந்தபுரம் வந்து சேருவதற்கு முன்னாலேயே, கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டெலிபோன் மூலமாக சங்கரனுடன் பேசிவிட்டார்; புதுடில்லி அரசினர் முடிவினைக் கூறிவிட்டார்! மந்திரி சபையின் ரகசியக் கூட்ட முடிவு கம்யூனிஸ்ட் அனுதாபியான வி. கே. கே. மேனன் வாயிலாக அஜய்கோஷுக்கு அறிவிக்கப்பட்டதால் அவர் உடனே கேரள அமைச்சர்களுக்குத் தெரிவித்தார். தங்களைக் காட்டிக் கொடுக்கும் சர்க்கார் நடவடிக்கை ரிகார்டுகளை, அவர்கள் அப்புறப்படுத்திக்கொள்ள உதவியது என பம்பாய் ஏடு ஒன்று கருத்துத் தெரிவித்துள்ளது! குடியரசுத் தலைவரின் கட்டளையை கேரள கவர்னர் கம்யூனிஸ்ட் மந்திரிகளுக்குத் தந்தார். அதனால் காலையிலேயிருந்த அரசவை மாலையிலேயில்லை! காலையிலே மந்திரிகள், மாலையிலே மாஜிகளாயினர்! சங்கரன் உள்ளிட்ட அமைச்சர்கள், திருவனந்தபுரத்துச் சர்க்கார் அதிகாரிகளிடையே விடை பெற்றுக்கொண்டார்கள்; மீண்டும் சந்திப்போம் எனச் சொன்னபோது பலர் கண்ணீர் வடித்தனராம்! கவர்னர் ராமகிருட்டிணராவ், பதவியிலிருந்து விலக்கப்பட்ட அமைச்சர்களுக்கு தேநீர் விருந்தளித்தார் - மன்னத் பத்மநாபன், பணம்பள்ளி கோவிந்தமேனன், பட்டம் தாணுப்பிள்ளைபோன்ற கேரளக் கிளர்ச்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து, அவர்கள் விரும்பியதுபோல் குடியரசுத் தலைவர் கேரள சர்க்காரை விலக்கி தம்முடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்துவிட்டதால் கிளர்ச்சிகளை நிறுத்திவிடும்படி வேண்டிக் கொண்டார்! மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர். கேரளமெங்கும் வெற்றி விழாக் கூட்டங்கள் நடைபெற்றன. கவர்னர் நடவடிக்கையினால் விடுதலை செய்யப்பட்ட கலவரக்காரர்களுக்கு சிறை வாயிலில் அமோகமான வரவேற்புகள் அளிக்கப்பட்டன. கத்தோலிக்கர்கள் களிப்பில் மிதந்தனர்! காரணம், தோழர் மணலி கந்தசாமி சொன்னதுபோல காந்தியார் கொலை செய்யப்பட்ட வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு, கேரள கம்யூனிஸ்ட் மந்திரி சபையை விலக்கி ஜனநாயகத்தைக் கொலை செய்த அருஞ் செயல்களுக்காக!

இந்திய சர்க்காரின் ஆதிக்க வெறி நிறைந்த நடவடிக்கை, மக்களாட்சி பண்புக்கு மரணச் சீட்டு வழங்கிய கட்டளை, 1959 ஜுலை 31-ம்தேதி மாலை 6 மணிக்கு நிறைவேறியது. இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் நல்லறிவாளர்கள் கண்டித்தனர்! இந்திய அரசியல் சட்டத்தின் 365-வது விதிப்படி எடுத்த நடவடிக்கை நாகரீகமற்ற அரசியலை உருவாக்குகிறது, என்பதை உணரத் தவறியவர்களுக்கு எடுத்துக் காட்டுவது எதிர்க் கட்சியினர் எல்லோருக்கும் கடமையாகிவிட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆகஸ்ட் மூன்றும் தேதியைக் கண்டன நாளாகக் குறிப்பிட்டு நாடெங்கும் ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்திக் காட்டின! கேரள மந்திரிகள் விலக்கப்பட்டது கம்யூனிஸ்ட்களின் இதயத்தை எவ்வளவு வேதனைப்படுத்தியது என்பதை, அவர்களின் ஊர்வலத்திலே ஒலித்த சில சொற்கள் வெளிப்படுத்தின! மதுரையில்நான்கு மாசி வீதிகளையும் ஊர்வலத்தால் நிரப்பிக் கம்யூனிஸ்ட்கள், கேரள கம்யூனிஸ்ட் சர்க்காரை நீக்கிய செயலைக் கண்டித்துக் குரல் கொடுத்தனர்-பாண்டுங் மாநாட்டுப் பரந்தாமன், ஆசிய நாடுகளுக்கு விடுதலை பெற்றுத் தரும் வீரன் என்றெல்லாம் பேசிய கம்யூனிஸ்ட்களில் சிலர் மட்டும் **"பாசிச வெறியன் பண்டித நேருவின் ஆட்சி ஒழிக"** என்று முழக்கமிட்டார்கள்; கை உயர்த்திக் கூவினார்கள். 'பதிபக்தி' விவாகரத்து நிலைக்கு வரும்போது இதுபோன்ற சொற்கள் இதயத்தின் அடித்தளத்திலேயிருந்து வெளி வருவது இயற்கையே! இந்தியப் பாராளு மன்றத்தின் மாரிக்காலக் கூட்டம் ஆகஸ்ட் மூன்றும் நாள் துவங்கியவுடன் கம்யூனிஸ்ட்கள் உள்ளிட்ட எதிர் தரப்பிலேயிருந்து கேரள சர்க்கார் நீக்கப்பட்டதைக் கண்டிக்கும் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன! திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்டனக் குரலை, மக்கள் சபையில் நம்முடைய சம்பத் அவர்கள் எதிரொலித்தார். தலைமை அமைச்சர் நேருவும், அவைத் தலைவர் அனந்தசயனமும் எதிர்க் கட்சியினரின் எந்த வேண்டுகோளையும் ஏற்கவில்லை. நேரு, ஏ. கே. கோபாலனைப் பார்த்து பாராளு மன்ற நெறியினைக் கடைப்பிடியுங்கள் என்றார். கம்யூனிஸ்ட்கள் அனைவருமே கேலி நிறைந்த மொழிகளாலே கேட்டார்கள், "உங்கள் பண்பைத்தான் நாங்கள் கேரளத்தில் கண்டோமே, நீங்களா எங்களுக்குப் புத்தி சொல்ல வந்துவிட்டீர்கள்" என்று எரிசாங்களென வார்த்தைகளை வீசிவிட்டார்கள்! எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் எல்லோரும் ஆட்சித் தரப்புத் தோழர்களையும், அமைச்சர்களையும், அவனி புகழ் பண்டித நேருவையும் கேள்விக் கணைகளாலே தாக்கினர். அவை அமைதி இழந்தது!

— 10-ம் பக்கம் —

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
மதுரை.

—9-ம் பக்கத் தொடர்ச்சி—

இந்திய சர்க்காரின் மக்களாட்சி பற்றிய பேச்சுக்கும், குடியரசுத் தலைவரின் செயலுக்கும் மிக மிக முரண்பாடு ஏற்பட்டுவிட்டதைத் தான் கேரள சர்க்கார் விலக்கப்பட்ட சம்பவம் நன்கு விளக்குகிறது! கேரள சர்க்காரின் மாஜி மந்திரிகள் இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லா முக்கிய நகரங்களுக்கும் சென்று, குடியரசுத் தலைவரின் ஆட்சியினை ஏற்றுக்கொள்வது மக்களாட்சிக்குப் புறம்பென்று பேசி வருகிறார்கள். ஆனால் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினரும், கேரளக் காங்கிரஸ் காரர்களும் பாராட்டி வரவேற்றனர். குடியரசுத் தலைவர் ஆட்சி வேண்டும் என்பதைக் கம்யூனிஸ்ட்களும் முதலில் விரும்பினர் என்று பண்டிதர் பறை சாற்றுகிறார். ஆனால் சங்கரன் 'சத்தியம் செய்து' மறுக்கிறார்! இரு முகாமினரும் மாறி மாறிப் பேசியதையே பேசிக்கொண்டிருக்கிறார்கள்! முன்னேற்றக் கழகம் மிகத் தெளிவாக விளக்கிவிட்டது, "வடநாட்டு ஆதிக்க வெறியர்கள் தென்னகத்து மாநிலங்களின் ஆட்சி உரிமையினைப் பாதுகாக்க முன்வரமாட்டார்கள், கேரளம் இதற்கோர் சான்று" என்று. ஆனால் ஜனசக்தி தோழர்கள், கேரளத்துச் செய்திகளை வைத்து வடநாடு தென்னாடு பிரிவினைப் பேச்சுக் கூடாதென்கிறார்கள்! வடவர் ஆதிக்கத்தை எதிர்த்துத் தனித்தியங்க வேண்டுமென்ற கழகத்தின் குரலுக்கு வலிவூட்டும் வகையில், கேரளத்தை இழுத்துச் செல்ல வேண்டாம் என்றும் வேண்டுகிறார்கள்! கண்டிக்க விரும்பாத காரணத்தால்தான் 'நம்நாடு'வின் கருத்துக்களை 'ஜனசக்தி'யில் எடுத்து வெளியிட்டு, முன்னேற்றக் கழகமும் டில்லி மூலவர்களின் முறையற்ற செயல்களைக் கண்டிப்பதாகத் தெரிவிக்கின்றார்கள்! அடிப்படையிலே மாறுபட்டாலும் கழகத்தின் ஆதரவுக் குரல் கம்யூனிஸ்டுகளுக்குத் தேவையாக இருக்கிறது! இந்தியத் துணைக் கண்டத்தின் கண்டனக் குரலைக் கேட்ட பிறகுதான், மக்கள் சபையில் சென்ற 17, 19 தேதிகளில் கேரளப் பிரச்சனை கடுமையான விவாதத்தில் முடிந்தது. கம்யூனிஸ்ட் தலைவர் டாங்கே, தனக்கே உரிய மிடுக்கான பாணியில் கேள்விகளைக் கேட்டார். கவர்னரின் அறிக்கையினைத் தாருங்கள் என்று மிக வலியுறுத்திப் பேசினார். வைத்திய விடுதிப் படுக்கையிலேயிருந்தாலும் கேரளப் பிரச்சனையில் முக்கிய பொறுப்பேற்ற உள்துறை அமைச்சர் வல்லபபந்த் அவர்களும் குடியரசுத் தலைவரின் ஆட்சியைக் கொணர்ந்தது சரியான காரியமே என விவாதித்துச் சமாளித்தார்! மக்களாட்சிப் பண்பைக் கொன்றது சரியென்று 230 உறுப்பினர்களும், ஆணவம் நிறைந்த கொடுஞ் செயல் என்று 38 பேர்களும் வாக்கெடுப்பின்போது தீர்ப்பளித்துள்ளனர்! இந்த முடிவு நாம் எதிர்பார்த்த முடிவு என்றாலும் ஜனநாயகக் கொலைக்கும் ஆதரவா?

இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் அமைப்பிலேகூட, இன்னும் கொஞ்சம் மக்களாட்சிப் பண்பு இருக்கிறது எனக் காட்டிக்கொள்பவர்களைப்போல் மீண்டும் 1960 துவக்கத்தில் பொதுத் தேர்தல் நடைபெறும் எனக் கூறுகிறார்கள். ராணுவம் அணிவகுத்துச் சென்றால் தான் அமைதி நிலவும் என எண்ணி ஏமாந்துவிட்டவர்கள், தேர்தல் நேரத்திலே அமளி நடைபெறுமலிருக்க எந்தவிதமான வழி வகுக்கப் போகிறார்களோ? காங்கிரசாரும், சோசலிஸ்ட்களும், முஸ்லீம் லீகினரும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டு, கேரள சர்க்காரை அரைமணி நேரத்தில் விரட்டி, அமைச்சர்களை அராபிக் கடலில் தூக்கி யெறிவேன், என்று பேசிய மன்னத் பத்மநாபன் பெரு முயற்சிகள் எடுத்துக்கொண்டுள்ளாராம்! கம்யூனிஸ்ட் செயலாளர் கோவிந்த நாயர் "நாங்கள் அதிக வாக்குகளைப் பெற்றாலும் அதிகமான எண்ணிக்கையில் சட்டமன்ற உறுப்பினர்கள் வருவோமா என்பது சந்தேகம்" என்று தெரிவித்தார். ஆனால் சங்கரன், கேரளத்தின் முன்னாள் முதலமைச்சர், "மீண்டும் நாங்களே ஆட்சிபீட மேறுவோம்" என்கிறார்! கேரள சர்க்கார் செய்த தவறுகளையும், துப்பாக்கி வேட்டைக்கு இரையானவர்களின் பிணங்களையும் கணக்கிலே எடுத்து வைத்துக்கொண்டு கவர்னர் ஆட்சி நீதிபதி விசாரணை செய்யப் போகிறதாம்! கேரளத்தின் எதிர் காலத்தில் மேலும் மேகங்கள் சூழ்ந்து அந்தப் பகுதி மக்களின் நல் வாழ்வினைச் சூறையாடும் நிகழ்ச்சிகளை நீக்குவதற்கு எல்லாக் கட்சியினரும் முயல வேண்டும்! கேரளப் புயலுக்கு கல்விச் சட்டம் கொணர்ந்த ஜோசப் முண்டசேரியின்கவனக் குறைவுதான் காரணம், என்று கம்யூனிஸ்ட் தலைவர்களிலே சிலர் கருதுகிறார்களாம்! இன்னும் தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிக்கொள்ளாத கிருஷ்ண அய்யர், கம்யூனிஸ்ட்கள் கடந்தகாலத்தை நினைவிலே நிறுத்தி, புதிய பாதையில் பயணப்பட வேண்டும் என்று ஆய்வுரைகள் தருகிறார்! கேரளத்தில் மீண்டும் ஆட்சிப் பீடம் பெறுவதற்கு அமிர்தசரஸ் வழியான ஜனநாயக முறைகளிலேயே கம்யூனிஸ்ட்கள் செயல்படுவர் என்பது அஜய்கோஷின் அறிவிப்பு! - அவரது கூற்றை வருங்காலம்தான் முடிவு செய்யும்! கேரளப் பிரச்சனையில் கழகத்தின் கருத்துக்களைக் கம்யூனிஸ்ட்கள் நன்கு கவனித்து வருகின்றனர். நம்மைக் கண்டித்துப் பேச, எழுத அவர்களுக்கே விருப்பமில்லை! முரண்பட்ட அமைப்பிலே உள்ள ஒரு விடுதலை இயக்கம், கேரளம்போன்ற போதுமான முக்கியத்துவம் பெற்றுவிட்ட பிரச்னைகளில் இப்படித்தான் நடந்துகொள்ளமுடியும் என்பதை, மக்களாட்சிப் பண்பினை மறந்துவிடாதவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அந்தப் பண்பு வளர நாம் பணியாற்றுவோம்!

★

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

தன்னையவள் காதலிக்கும் குறிப்ப றிந்து
 தாவிவரும் பேரன்பால் ஒன்று சேர்ந்து
பிள்ளையவள் நலங்கூறிக் கொண்ட காதல்
 பெருஞ்சிறப்பை யெடுத்தெடுத்துக் கூறுகின்றான்!
என்னையுடல் என்றுரைத்தால் உயிரே போல்வாள்
 எழில்மடந்தை யவள்பிரிந்தால் சாவு நேரும்!
என்றுரைத்தான் திருக்குறளின் தலைவன் என்றால்
 இதுபோன்ற மெய்க்காதல் எங்கு முண்டோ?

மறுவற்ற மதிமுகத்தாள் காதல் கண்டு
 மனத்துணிந்து குறைகூறும் உலக மென்றால்,
அறிவற்ற சிலர்போலப் பெற்றோர் தேடி
 யளிக்கின்ற ஒருத்தியுடன் வாழ்க்கை காணும்
நெறியற்ற போக்கினிலே செல்ல மாட்டான்
 நீதிசொல்லும் திருக்குறளின் தலைவன் கற்பு
நெறிபற்றி வாழ்கின்ற இல்ல றத்தில்
 நேர்பட்ட காதலியின் தோளே சேர்வான்!

தேவைக்குப் பெய்யென்னப் பெய்மழை போல்
 தெள்ளமுதாய் வாய்த்துவிட்ட காதல் மங்கை
சேவைக்கு முந்திடுவாள்; கணவன் சொல்லைச்
 செவியேற்று நடந்திடுவாள்; கற்பின் மாட்சி
யாவர்க்கும் தெரிந்திடவோர் எடுத்துக் காட்டாய்
 அலங்கரிப்பாள் மனையகத்தை! அந்த அன்புப்
பூவைக்கு நான்கணவன் என நினைத்துப்
 பூரிக்கும் நெஞ்சுடையான் குறள் தலைவன்!

கற்கின்ற போதெல்லாம் அறிவு கூட்டிக்
 கல்லாத போதிருந்த மடமை காட்டி
அற்புதத்தைச் செய்கின்ற கல்வி போலே
 அழகுடைய காதலியைத் தேடிச் சென்று
வெற்பனைய தன்தோளில் அணைக்கும் போது
 விளைகின்ற இன்பத்தை எண்ணிப் பார்த்து
முற்காணா இன்பமிதே என்று சொல்லி
 முறுவலித்துக் குறள்படிப்பான் நற்ற லைவன்!

பெற்றவர்க்குப் பெயர்பெற்ற பிள்ளை யாவான்
 பிள்ளைகளை முன்னேற்றும் தந்தை யாவான்
சுற்றத்தார்க் குறவாவான் நட்பி னர்க்குத்
 துணையாவான் நாட்டினர்க்குத் தொண்ட னாவான்
கற்றறிந்த மாணவனும் ஆசா னுக்குக்
 கல்விதரும் கணக் காயன் மாணவர்க்கு!
பற்றுவைத்த மனைவிக்கோ தெய்வ மாவான்
 பண்புடைய தலைவன்நல்ல துணையு மாவான்!

மனமாரக் காதலித்த ஒருத்தி தன்னை
 மணந்தின்பம் காணுகின்ற காரணத் தால்
தினந்தினமும் பிறர்வாழப் பொறுமை கொண்டு
 தியாகத் தன்நெஞ்சை மாய்ப்ப தில்லை.
நினைக்கின்ற போதெல்லாம் இன்பஞ் சேர்க்கும்
 நேரிழையைக் காதலியாய்ப் பெற்ற தாலே
தனைக்கொல்லும் நோய்வழங்கும் மாத ரோடு
 தனித் திருக்க நினைப்பதில்லை குறள் தலைவன்!

குணக்குன்றாய் ஒருமனைவி வாய்த்த தாலே
 குறையின்றி வாழ்ந்திருப்பான்; மழலைப் பேச்சில்
கணக்கின்றி இன்பத்தைச் சேர்க்கும் பிள்ளைக்
 கனிகளையும் பெற்றெடுத்தான் மகிழ்ச்சி பெற்றான்!
மணக்கின்ற தென்றலுக்கும், அடர்ந்தி ருக்கும்
 மரநிழற்கும், பூத்திருக்கும் மலர்க ளுக்கும்
துணைக்கிருக்கும் தலைவிக்குத் துணைவ னாகத்
 தொடர்கின்றான் தலைவன் இனி நிறுத்திக்கொள்வோம்!

[இக்கவிதையை அரங்கேற்றியவர் திரு. நாரா நாச்சியப்பன் அவர்கள். அடுத்த இதழில் திரு. கவிஞர் முடியரசன் அவர்கள் அரங்கேற்றிய கவிதை வரும்.]

"தென்றல்"

அதிகம் செலவாகும் இலக்கியக் கிழமை இதழ்.

★

(உள் நாடு)

ஆண்டுச் சந்தா	ரூ. 7-50
ஆறு மாதம்	ரூ. 3-75

(வெளி நாடு)

ஆண்டு சந்தா	ரூ. 10-50
ஆறு [illegible]தம்	ரூ. 5-25



நண்பர்கட்கு...

22—8—'59 "தென்றல்" இதழில் 'வேண்டுதல் வேண்டாமை" என்ற திருக்குறள்பற்றி மணமேல்குடி திரு. சுப்பையா அவர்கள் கேட்ட வினுவிற்கு, யான் அளித்த விடைபற்றி, பலர் கருத்துரைகளை வழங்கி யிருக்கின்றார்கள். அவர்களுள் ஒருவரின் முடங்கல், இந்த இதழில வெளியாகியுள்ளது. மேலைச்சிவபுரி செந்தமிழ்க் கல்லூரி-தமிழண்ணல், தருமபுரம் தமிழ்க் கல்லூரி-தென்னவன், நாமக்கல் வள்ளி முதலியோரும் இந்த இதழில் வெளியாகியுள்ள அதே கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

—கண்ணதாசன்.

எம். ஜி. கணேசன்,
எஸ். கமலாவதி, பரமக்குடி.
மணிமாறன்,
மருத்துவக்கல்லூரி, மதுரை.
சி. சு. தேவராசன், சிறுதையூர்.
மு. பாசுகரன், பெங்களூர்.

"தமிழ்நாடு" 27-8-59 இதழில் எல். கிருஷ்ணசாமி பாரதி எம். ஏ., பி. எல். அவர்கள், "அன்பர் அஞ்சல்" என்ற பகுதியில் எழுதிய மடலைப் படித்தீர்களா ? தங்கள் பதில் தேவை ?

மடலைப் படித்தேன். "பால்ப் பண்ணை, என்று எழுதுவது இலக்கண விதிக்கு முரணனது" என அவர்கள் குறித்திருக்கின்ருர்கள். மீண்டும் ஒருமுறை யான் எழுதிய விடையை அவர்கள் படிப்பார்களானுல், அவர்கள் கருத்தையே தான் யானும் வலியுறுத்தியுள்ளேன் என்பதனை அறியமுடியும். "...ல, ள,ழ-இவற்றின் மெய்கள்மற்ருெரு மெய் தொடரும்போது புணர்ச்சி விதிப்படி அடிபட்டுப்போகின்றன." என்று அழுத்தமாகவே குறிப்பிட்டுள்ளேன். "ல், ள், இவற்றுடன் அடுத்த மெய் வரவும் செய்யலாம் !" என யான் குறிப்பிட்டதற்குக் காரணம் உண்டு. இவை இரட்டிக்குமிடத்துத்தான் புது எழுத்துத் தோன்றுகிறது என்பதால், அந்த இரட்டிப்பும் இலக்கண விதிக்கு உள்ளடங்கியது என்று நான் கருதுகிறேன். ஈரேழு பதினன்கு. பதினன்கு என்னும் சொல்லிருக்கும்போது ஈரேழு என்கின்ற சொல்லும் பயன்படுத்தப்படுகின்றதல்லவா ? இதனைக் கருத்தில் கொண்டே, "மறுமெய் தொடர்ந்து வரவும் செய்யலாம்" என யான் குறித்தேன். உண்மையில், "பால்ப் பண்ணை", "புல்த்தரை" என்றெல்லாம் ஒரு சிறு கூட்டம் எழுதி வருவதைக் கடுமையாகக் கண்டிப்பவன் நான். 1944-ல் சின்னமனூரில் நடைபெற்ற தமிழ்த் தொண்டர் மாநாட்டில், நாவலர் பாரதியார் அவர்கள், இம்முறையைக் கடுமையாகக் கண்டித்தது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அம்மாநாட்டில் மு. இராசாக் கண்ணனுர், பாவாணர், லால்குடி சரவணர் ஆகியோரோடு நானும் கலந்துகொண்டேன். நாவலரய்யா அவர்களிடம், டி. கே. சிதம்பரநாதர் இப்படி எழுதி வருவதையும், மற்ருெரு புலவர் அதை ஆதரிப்பதையும் பற்றி நான்தான் கேட்டேன். அதற்கு நாவலர் அய்யா அவர்கள், "அப்படியா ? அதை இன்னெரு புலவரும் ஆதரிக்கிருரா ? சரிதான். 'கல்த்தாரைக் கல்த்தாரே காமுறுவர் !" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள். இதனை நான் ஏற்கனவே "தென்ற"லில் வெளியிட்டிருக்கிறேன். திரு. கிருஷ்ணசாமி பாரதி அவர்கள் இவ்வினுவினை எழுப்பியதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். சுருக்கமாக, ஒன்றன் உள்ளடங்கிய மற்ருென்றை விதிக்கு உள்ளடங்கியதாகக் கருதியே குறித்தேன் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

★

பா. ஆலாலன், மதுரை.

தங்கள் கவிதைத் தொகுப்பிலுள்ள ஒரு கவிதையில் கீழ்க்காணும் வரிகள் வருகின்றன.

"அன்னையுன் நாட்டைப்
பிரித்திடுவோம்-இல்லை
ஆவியழிந்திடக்
கண்டிடுவோம்.
கண்ணையும் காலையும்
வெட்டியபின்-இந்தக்
காயமிருந்தென்ன ?
போயென்ன தம்பி ?"

—இவற்றுள் கடைசி வரி சீர் மிகுந்து காணப்படுகிறது. காரணமென்ன ? தங்களது நூற்றுக்கணக்கான பாடல்களில் இது ஒன்றுதானே ஓசை தட்டுகிறது—ஏன் ?

குறிப்பிட்ட பாடல் "தென்றல்" மலர் 3, இதழ் 1-ல் (23-6-56) வெளி வந்திருக்கிறது. அதை எடுத்தே தொகுப்பில் சேர்த்திருக்கிருர்கள். தொகுப்பாளர் அச்சுத் திருத்தும்போது அசல் பிரதியைத் தவற விட்டுவிட்டு, தோன்றியபடி முடித்திருக்கிருர். அவரே பிறகு வந்து வருந்தினர். குறிப்பிட்ட 23-6-56 நாளிட்ட இதழை எடுத்து 12-ம் பக்கத்தைப் பாருங்கள். ஓசைக்கு ஒரு குறையும் இருக்காது.

"காயம் இருந்தென்ன ?
போயுமென்ன ?"

என முடிந்திருக்கிறது. தவறு யார் செய்தாலும் பொறுப்பு எனக்குத் தான். ஆனுல், நான் கவனித்து வெளியிட்ட அச்சுப்பிரதி-அதாவது "தென்றல்" இதழ், சரியாகவே அமைந்திருக்கிறது.

★

சு. ஆறுமுகன், கணபதி,
கோவை-6.

இந்தி எழுத்துக்கள் தமிழெழுத்துக்களிலிருந்துதான் உருவானவை என்பதைச் சான்றுகளோடு நிலைநாட்ட முடியுமென்று சென்னைப் பல்கலைக் கழக இந்தி மொழித் தலைவர் திரு சங்கரராச நாயுடு கூறுகிருர். இது உண்மையா ? தங்கள் கருத்து யாது ?

இருக்கலாம். எழுத்தாய்விலே நான் சிறியவன். அப்படியிருந்தால் அது தமிழுக்குப் பெருமைதான். இந்திக்குத் தமிழே தாயாக இருக்கும்போது,தாய்மொழியைப் பொதுமொழியாக்காமல், சேய்மொழியைப் புகுத்தும் ஆட்சியாளருக்குப் புத்தி கூறுமாறு அவ்வறிஞர் தலைவரை வற்புறுத்துங்கள். இந்த ஆய்வுகளெல்லாம், இந்தியிடம் நமக்குப் பற்றுதலை ஏற்படுத்திவிடுமென்று நினைக்கிறீர்கள் ?

★

வே. வேல்மாறன்,
யாழ்ப்பாணம்.

அண்மையில் தாங்கள் யாழ்ப்பாணம் வருவதாகக் கூறுகிருர்களே-உண்மையா ?

திருக்குறள் மாநாட்டுச் செயலாளரிடமிருந்து கடிதமும் விசா அனுமதியும் வந்தன. ஆனுல் 12, 13 நாட்களில் பூவிருந்தவல்லியில் தி. மு. க. மாநாடு இருக்கிறது. அதே நாளில் வரும்படி, திருக்குறள் மாநாட்டினர் வற்புறுத்துகின்ருர்கள். இயலாமை குறித்து எழுதியுள்ளேன்; இரண்டொரு நாட்கள் கழித்துவருவேன்.

★

வெள்ளிமலை, ஆவடி.

"1-ஆம், 2-ஆம் என்று எழுதுவதுதான் சரி; 1-ம், 2-ம் என்று எழுதுவது தவறு" என எனது தமிழாசிரியர் கூறுகிருர். இவற்றில் எது சரி ?

தமிழாசிரியர் தவறு செய்வாரா? அவர் வழியே நானும்.

★

பா. வேலாயுதம், பழனி.

"முக்குலத்தோர்க்கே உலகில் உவமை காண்பது அருமையடா!" என்று பாட்டெழுதியிருக்கிறீர்களே. முக்குலம் என்பது சாதியைக்குறிப்பதல்லவா? சாதிகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா ?

முக்குலம் என்பது சாதியல்ல. கள்ளப்படை, மறப்படை, அகப்படை ஆகிய மூன்று படைகளைக் குறிக்கும். பகைவரின் பாசறைக்குள் ஊடுருவி உளவறிந்து வருவது கள்ளப்படை. நேர்சென்று போர்புரிவது மறப்படை. கோட்டையைக் காப்பது அகப்படை. இம்முப்படைகளே, கள்ளர் - மறவர்-அகம்படியர்என்ற முக்குலமாக மாறின. தலைமறைந்து செல்வதைக் கள்ளத்தனம் என்றும், துணிந்து நிற்பதை மறத்தனம் என்றும் அழைப்பதை அறிவீர்கள். இவை, பின்னுல் வந்த வழக்குகள். உளவறியும் கடினமான வேலையைச் செய்ததால் தான், கள்ளப்படைக் குலத்தினரை "அம்பலகாரர்கள்" என்று மரியாதையோடு அழைக்கிறது, மறவர் நாடு.

கண்ணதாசன் பதில் தருகிறார்.

ஆசிரியத் தொடர்புக்கு.

அய்யா,

இரண்டு தினங்களுக்குமுன் தமிழரசுக் கழகத்துக்காரன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஒருவன் சேலத்தில் ஒரு கடைக்கருகில் நின்றுகொண்டு, தங்களைப்பற்றித் திட்டிக்கொண்டிருந்தான். "சுகம் எங்கே" என்ற படத்தில் வரும் "தென்றலடிக்குது; எனைமயக்குது!" என்ற பாட்டு தாங்கள் எழுதியது எனவும், இது பழம் பாடலிலிருந்து திருடப்பட்டது எனவும் கூறிக் கொண்டிருந்தான். நான் அக்காலத்தில் மாடர்ன் தியேட்டர்சில் பணிபுரிந்தவன். நான் அவனிடம் போய் "அட முட்டாளே! அது மருதகாசி எழுதியது இசையமைத்த விஸ்வநாதன்-ராமமூர்த்தியைக் கேட்டுப் பார்! அப்போது மானேஜராக இருந்த சுலைமானைக் கேட்டுப் பார்! அந்தப் பாட்டுக்காக மருதகாசிக்குப் பணம் கொடுத்த சுந்தரத்தைக் கேட்டுப் பார்!" என்று சொன்னேன். அவனும் விசாரித்துப் பார்த்து விட்டு, மறுநாள் வந்து என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

இப்படிப்பட்ட முட்டாள்களே முழுக்க முழுக்க நிறைந்திருக்கும் அந்தக் கட்சியைப்பற்றியோ, தரமோ தகுதியோ அற்றவர் என்று புலவர் பெருமக்களால் வெறுத்தொதுக்கப்பட்ட அதன் தலைவரைப் பற்றியோ, இனி ஒரு வார்த்தைகூட, "தென்ற"லில் எழுதவேண்டாம். எங்களுக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

அன்பன்
இரா. பார்த்தசாரதி.

அரிசிப்பாளையம்,
சேலம்
3-9-'59.

"தென்றல்" தரும்

அண்ணு

பொன் விழா மலர்.

எல்லோருக்கும் மலர் எளிதில் கிட்ட வேண்டுமென்பதற்காக விலை குறைக்கப்பட்டுள்ளது.

மலரின் விலை
25 காசுகள்தான்.

தமிழ் வல்லார் பலரின்
கட்டுரைகளுடன்,
ஆசிரியர்
கண்ணதாசன்
எழுதும்
"ஒரே தலைவன் !"
எனுங் குறுங்காவியமும்
இடம் பெறும்.

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

“உமது ஆட்சியில்மட்டும் என்ன நடந்தது? நீர் செங்கோல் பிடித்திருந்தபோதும் ஊழலும் மோசடியும் எண்ணித் தொலைக்கமுடியாத அளவு வளர்ந்தனவே-அவற்றிற்கு என்ன சொல்கிறீர்? நீர் உடைத்தால் மண் குடமா? நாங்கள் உடைத்தால் பொன்குடமா?” என்று கேட்கின்றனர், சம்பூரணானந்தரின் ஆழ்வார்கள்.

“நாங்கள் செய்தோம் என்பதற்காக நீங்களும் செய்வதா? நாங்கள் அயோக்கியர்களாகவே இருக்கிறோம். நீங்கள் ஏன் யோக்கியர்களாக இருக்கக்கூடாது? உண்மைக்கு வாழ்வளிக்கக் கூடாதா?” என்று குப்தா குழுவினர் கூறுகின்றனராம். ஆனாலும் குப்தாவின் பேச்சில் ஒரு பயன் இருக்கிறது. அவரது பேச்சும் செயலும், அவரது பழைய கறையைக் கழுவி, நல்லவராகிக் காட்டுகின்றன; ஏமாளிகள் அப்படித்தான் நம்புவர்.

“அதிருப்திக்காரர்”களின் ஆவலெல்லாம், சம்பூரணானந்தர் தலைமையை அ. இ. கா. கமிட்டியினரே மாற்றும்படியான நெருக்கடியை உண்டாக்கி, வெல்வதுதான். முதலமைச்சரோடு, இவர்கட்குப் பிடிக்காத பிற அமைச்சர்களும் விலக்கப்பட வேண்டும் என்பதும் ஓர் ஆசை.

சம்பூரணானந்தர் தனது அமைச்சரவையில் சுல்தான் ஆலம்கான், விரேந்திர வர்மா ஆகிய இருவரையும் சேர்த்துக் கொண்டுள்ளார். இவர்கள் இருவரும் மாணிக்கவேலர்கள். அவர்களை அணைத்துக் கொள்கின்ற முதலமைச்சர், 1921 முதல் காங்கிரசில் உழைத்ததாகச் சொல்லப்படும் அல்குராய் சாஸ்திரி போன்றோரை அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளவில்லையாம். “கேரளத்தில் முசுலீம் லீகுடனும் ஒரிசாவில் கணதந்திர பரிசத்துடனும் கூட்டு வைத்து அணைத்துக்கொண்டு திரிகிற காங்கிரசு, எங்களை எப்படிக் குற்றவாளிகளாக்க முடியும்?” என்று கேட்டாராம் அல்குராய். இதுவும் ஒரு சிக்கல்!

எதிர்க்கட்சிகளும், இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. அந்தச் சட்டமன்றில் உள்ள ஆறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கூடி “அமைச்சரவை பதவி விலக வேண்டும்!” எனக் கூட்டறிக்கை ஒன்று விடுத்திருக்கின்றனர். பொதுவுடைமை அணியின் தலைவரும் சோசலிஸ்ட் அணித்தலைவரும் மாநில நாயகரைக் கண்டு, இதனை வலியுறுத்தியிருக்கின்றனர். அவரும் சட்டக் கூறுகளைப் பார்த்து ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் பி. சோ. தலைவர் திரிலோகிசிங் மட்டும் முதலமைச்சரை ஆதரிக்கிறார். அவருக்கு மட்டும் என்ன கேடுகாலமோ? முன் கூட்டியே எதிரணியினர் கலந்திருக்கப்பட்டால், அவர்களும் ‘அதிருப்திக் காங்கிரசா”ருடன் சேர்ந்து வாக்களித்திருக்கவும், ஆளும் கட்சி 33 வாக்குகள் குறைவாய்ப் பெற்றுத் தோற்கவுமான நிலைகள் ஏற்பட்டிருக்கும்.

காங்கிரசுக் கட்சியின் தலையாய இடங்களை எல்லாம் திறமையுடன் செயல்பட்டுக் கைப்பற்றிவிட்டனர் குப்தா குழுவினர். மாநிலக் காங்கிரசின் தலைவரும், செயலாளர்கள் நால்வருள் இருவரும், உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரும் குப்தாவின் ஆட்கள். மண்டலங்களிலும் நகரங்களிலும் மாவட்டங்களிலும் உள்ள தொண்டர்கள் குப்தாவின் பின்னே நின்று குரல் கொடுக்கின்றனர்.

அரசின் நடவடிக்கைகளுக்கெதிராகக் கண்டனக் குரல் எழுப்பும் நிகழ்ச்சிகளை நேரடியாகவும் செய்கின்றனர். முதலமைச்சரின் ஆட்கள் திருட்டுவேலைகளிலும் இறங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மாநிலக் காங்கிரசு அலுவலகத்திலிருந்து சில எழுத்துச் சான்றுகள் திருடப்பட்டிருக்கின்றன. வேறு சில எழுத்துச் சான்றுகள் சிதைக்கப்பட்டிருக்கின்றன. “அவற்றைத் திருடியோர் மாநில ஆட்சியில் உள்ள இரு துணை அமைச்சர்களே!” என மாநிலக் காங்கிரசுத் தலைவர் குற்றம் சாட்டுகிறாராம். அரசின் அலுவலகத்திலிருந்த பழைய எழுத்துச் சான்றுகளைத் திருட்டுத்தனமாகப் பார்த்துத்தானே ஊழல் பட்டியலை எழுதினர் அதைவிடவா இது தாழ்வு?” எனக் கேட்டாலும் கேட்கலாம் துணை அமைச்சர்களும் அவர்களைத் தூண்டிவிட்டவர்களும். “மாநிலக் காங்கிரசின் தலைவர் ஆட்சியைக் குலைக்கும் குழுவிற்குத் துணை போகிறார்!” என்ற குற்றச்சாட்டை வேறு தயாரித்து அது சில அமைச்சர்களின் கையெழுத்துக்களோடு இந்திராவிடம் அனுப்பப்பட்டுவிட்டதாம். அம்மையார், “எதிர்ப்பணியினர் சட்டமன்றில் வெளிப்படையாகப் பேசியது சரியா?” என்று கேட்டாராம். உள் துறை அமைச்சராகவுள்ள கமலாபதி திருபதி என்பவர்மீது நடத்திவந்த விசாரணையைத் தள்ளி விட்டுவிட்டு, தனக்கு அவர் ஆதரவைத் தேடிக்கொண்டிருக்கிறார் முதலமைச்சர். “அது சரியா?” என்று பதிலுக்குக் கேட்டிருக்கிறார் ஆச்சார்யா சுகல் கிசோர்.

பொதுமக்களின் கருத்தையும் அக்கறையையும் இக்குழப்பம் வெகுவாக ஈர்த்திருக்கிறது. பரவலான கெட்ட பெயரையே முதலமைச்சர் கூட்டத்தினர் பெற்றிருக்கின்றனர். அதை மறைக்க, குப்தாவுக்குத் துணை நிற்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் அமைச்சர்கள் அடிக்கடிச் சுற்றுப் பயணம் செய்து, ஆசை மொழிகள் சிந்துகின்றனர். ஆனாலும் மக்கள் மயங்வில்லை!

முதலமைச்சர் பேசிய ஒரு கூட்டத்திற்கு 2000 பேரே வந்தனர். அதே இடத்தில் உள்ளூர்க் காங்கிரசுக் கிளையால் கூட்டப்பட்டு, சரண்சிங் பேசிய கூட்டத்திற்கு 10000 மக்கள் வந்திருந்து சரண்சிங்கின் பேச்சைப் பாராட்டியிருக்கின்றனர். மொத்தத்தில்........

நாடெங்கும் நடந்து வரும் பதவிப் போருக்கு ஒரு சான்று, உ. பி. கலவரம்! சம்பூரணானந்தருக்குத் துணை நின்று ஆரவாரிக்கின்றனர், கௌதமும் கமலாபதி திரிபதியும் பிறரும்! குப்தாவைக் கேட்டுக் கொண்டு சரண்சிங்கும் அல்குராயும் சுகல்கிசோரும் பிறரும் குதிக்கின்றனர்; குத்துகின்றனர்! சட்டமன்றம் போர்க்களமாகிவிட்டது! சமாதானப் புறாவைப் பறக்கவிட்ட நேருவின் ஆசையும் சரிந்துவிட்டது.

ஆனால் இரு தரப்பாரும் மக்களின் நலனுக்காக இந்தச் சண்டைகளைப் போடவில்லை; தமக்குப் பதவி கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தில்தான் இரு சாரரும் சல்லடம் கட்டுகின்றனர். இதனால் நாட்டுக்கு இலாபம் ஏதுமில்லை. ஆட்சியாளரின் வேலைகள் தடைப்படுகின்றன! மக்களுக்குக் கிடைக்கவேண்டிய நலன்கள் தடைப்படுகின்றன. பொதுப் பணம் வீணாகிறது.

இன்றும் பேசுகின்றனர், காங்கிரசு இயக்கம் ஒரு குடும்பம் என்று! பதவிக்காசைப்பட்டு அடித்துக் கொள்வோர் தாம் அண்ணன் தம்பிகளா? இவர்களை நம்பி மக்கள் அழிவதுதான், மக்களின் தலையில் அரசியல் சட்டம் எழுதிய எழுத்துக்களா? காந்தியார் உயிரோடு இருந்திருந்தால்... இக்காட்சிகளைக் காணும் வாய்ப்பைப் பெற்றிருந்தால், கட்டாயம் கண்ணீர் வடித்திருப்பார்!

— மா. பாண்டியன்.

வாழ்க! வாழ்க!

★

செழியன் - பிரேமலதா.

26-8-’59 அன்று மாலை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் **அறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையில் திரு. **இரா. செழியன்** எம். ஏ. அவர்களுக்கும், தோழியர் **பிரேமலதா** எம். பி., பி எஸ். அவர்களுக்கும் திருமணம் நடந்தது. முன்னாள் நீதிபதி திரு அய்யாசாமி, நகராட்சி மன்ற ஆணையாளர் சங்கரன், டைரக்டர் ப. நீலகண்டன், அமைச்சர் ஆர். வெங்கட்டராமன், டாக்டர் மு. வரதராசனார், வழக்கறிஞர் வி. பி. இராமன், நகரத் தந்தை அ. பொ. அரசு, பேராசிரியர் க. அன்பழகன், சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், ஆசிரியர் கண்ணதாசன் முதலியோரும் மாவட்டச் செயலாளர்களும், கழகத் தோழர்களும் பிறரும் திரளாகக் குழுமியிருந்து திருமண விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். மணமக்கள் இருவரும் பொதுமக்களுக்கு இடையே தங்கள் திருமண ஒப்பந்தத்தைப் படித்து, மாலை மாற்றிக்கொண்டனர்.

மணமக்களை வாழ்த்தி ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் வந்து குவிந்தன.

பொதுச் செயலாளர், நாவலர் **திரு. இரா. நெடுஞ்செழியன்** எம். ஏ. அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

★

வீரப்பன் - கண்ணாத்தாள்.

வெற்றியூர் திரு. ஆ. நடராசன் அவர்கள் செல்வி **கண்ணாத்தாளுக்கும்** நாட்டரசன்கோட்டை திரு. இலட்சுமணன் அவர்களின் செல்வன் **வீரப்பனுக்கும்** 31-8-’59 காலை 11 மணியளவில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. உற்றார் உறவினர் திரளாக வந்திருந்து மணமக்கள் நீடு வாழ வாழ்த்தினர்.

“தென்றல்” ஆசிரியரும், பணிமனைத் தோழர்களும் பிறரும் வாழ்த்துச் செய்திகளும் பரிசுகளும் பெருமளவில் அனுப்பியிருந்தனர்.

★

டேனியல் - யசோதா.

சென்னை தேனாம்பேட்டை தி. மு. க. ஊழியர் தோழர் **டேனியல்** அவர்கள், காலஞ்சென்ற ‘ஸ்டண்ட்” பலராமன் அவர்களின் புதல்வி செல்வி **யசோதாவை** 3-9-’59 அன்று வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்கள். தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடத்தில் அமைந்திருந்த அழகு அரங்கில் நடந்த இத்திருமணத்திற்குத் திரளாக வந்திருந்தனர், கழகத் தோழர்களும் கலையுலகத்தவர்களும். காலையில் நடைபெற்ற திருமணத்திலும் மாலையில் நிகழ்ந்த வரவேற்பிலும் கழகத் தோழர்கள் பலர் வாழ்த்துரைத்தனர்.

இம்மணமக்கள் அனைவர்க்கும் “தென்றல்” தன் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. வாழ்க! வாழ்க!

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு